பக்கங்கள் : பதினான்கு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 தை 26 புதன்கிழமை (08.02.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :73

# நோர்வே, சுவிஸ் தூதுவர்கள் நாளை கிளிநொச்சி விஜயம்

## பேச்சுக்கான முன்னேற்பாட்டைக் கவனிக்க

கிளிநொச்சி,பெப்ரவரி8

**ஜெனீவாப் பேச்சுக்களில் பங்குபற்றும் விடுதலைப் புலிகள் குழுவினர் தொடர்பான முன்னேற்பாடுகள் குறித்து விடுதலைப் புலிகளுடன் பேச நோர்வே மற்றும் சுவிற்சர்லாந்து ஆகிய நாடுகளின் இலங்கைக்கான தூதுவர்கள் நாளை கிளிநொச்சி வரவுள்ளனர்.**

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைச் சீராக நடைமுறைப்படுத்துவது குறித்து தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசுப் பிரதிநிதிகளுக்குமிடையே சுவிற்சர்லாந்தின் ஜெனீவா நகரில் எதிர்வரும் 22 மற்றும் 23ஆம் திகதிகளில் பேச்சுகள் இடம்பெறவுள்ளன.

இப்பேச்சுகளில் விடுதலைப் புலிகள் தரப்பில் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம்,

(14ஆம் பக்கம் பார்க்க)

## பேசாலைப் பகுதியில் நேற்று கதவடைப்பு

பேசாலை,பெப்.08

மன்னாரில் கடற்படையினரால் மீன் பிடிப்பதற்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று பேசாலைப் பகுதியில் கடையடைப்பு மற்றும் பணிப்புறக்கணிப்புக்களில் மீனவர்கள் ஈடுபட்டனர்.

கடற்றொழிலுக்காக கடலுக்குச் செல்லும் போதும், கரைக்குத் திரும்பும் போதும் கடற்படையிடம் பதிவுசெய்ய வேண்டும் எனப் படையினர் புதிய கட்டுப்பாடுகளை விதித்தமையை எதிர்த்தே இந்தப் போராட்டம் இடம்பெற்றது. பேசாலை நகர வீதியில் அமர்ந்து மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இவர்களுக்கு ஆதரவாக வர்த்தகர்களும் கடைகளை மூடி பணிப்புறக்கணிப்பில் பங்குகொண்டனர்.

சம்பவ இடத்துக்கு விரைந்த படை உயர் அதிகாரிகள் புதிய கட்டுப்பாடுகளை வாபஸ் பெறுவதாக உறுதியளித்தமையையடுத்து போராட்டம் முடிவுக்கு வந்தது.

(ஓ-க)

## இராணுவ நலன்புரி என்ற பெயரில் படைக்கு ஆள்திரட்டுவதற்கு முடிவு

கொழும்பு, பெப்.8

இலங்கை இராணுவத்திற்கு புதிதாகத் துருப்புகளைச் சேர்த்துக்கொள்வதற்கு பாதுகாப்பமைச்சு தீர்மானித்திருக்கிறது.

இவ்வாறு சேர்த்துக்கொள்ளப்படும் சிப்பாய்களுக்கு சீருடை மற்றும் ஆயுதப் பயிற்சி வழங்காமல் வெறுமனே அவர்களை இராணுவ நலன்புரிச் சேவைகளில் ஈடுபடுத்த பாதுகாப்பு அமைச்சு உத்தேசம் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும் 'இராணுவ நலன்புரி' என்ற போர்வையில் உளவு வேலைகளில் ஈடுபடுத்துவதற்காகவே இவ்வாறு சிப்பாய்களைச் சேர்த்துக்கொள்ள பாதுகாப்பமைச்சு தீர்மானித்துள்ளதாக மற்றுமொரு தகவல் தெரிவித்தது. (க)

### உள்ளூராட்சித் தேர்தல்கள்

# ஐ.தே.க. வாகை சூடுமானால் அதற்கு சு.க.வே பொறுப்பு என்கிறது ஜே.வி.பி.

## விஜித ஹேரத் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, பெப்.08

"எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் தனித்துப் போட்டியிடுவதற்கு ஜே.வி.பி. தீர்மானித்திருக்கிறது. இம்முறை தேர்தலில் பெரும்பாலான ஆசனங்களை நாமும் கைப்பற்றுவோம். அதேபோல் ஐக்கிய தேசியக் கட்சியும் பெரும்பாலான ஆசனங்களைக் கைப்பற்றும். ஐக்கிய தேசியக்கட்சி பெரும் வெற்றியீட்டுமானால் அதற்கான முழுப் பொறுப்பையும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியே ஏற்கவேண்டும்."

- இவ்வாறு நேற்றுத் திட்டவட்டமாகத் தெரிவித்தார் முன்னாள் அமைச்சரும், ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத். நேற்று 'உதயன்'இற்குக் கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஜே.வி.பியின் நிலைப்பாடு குறித்துக் கேட்டபோதே மேற்கண்டவாறு அவர் கருத்து

(14ஆம் பக்கம் பார்க்க)

### ஆளும்தரப்பு, எதிர்த்தரப்பு ஆகிய

# இரண்டு பக்கங்களிலிருந்தும் இ.தொ.காவுக்கு அழைப்பாம்!

கொழும்பு.பெப்.8

"நாங்கள் குப்பையென்று ஒதுக்கிய ஒன்று இப்போது அரசாங்கத்தின் பக்கம் சேர்ந்திருக்கிறது. அந்தக் குப்பையை அரசு ஒதுக்கினால் எதிர்வரும் தேர்தலில் ஆளுங்கட்சியுடன் இணைந்து போட்டியிடவும் இ.தொ.கா. தயாராகவே இருக்கிறது."

- இவ்வாறு கருத்து வெளியிட்டார் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் மூத்த பிரமுகர் ஒருவர். உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் குறித்து கருத்து வெளியிட்ட அவர் மேலும் கூறியதாவது :-

உள்ளூராட்சித் தேர்தலில் இணைந்து போட்டியிட முன்வருமாறு ஆளுங்கட்சியிலிருந்தும் எதிர்க்கட்சியிலிருந்தும் அழைப்

(14ஆம் பக்கம் பார்க்க)

# ஜே.வி.பி. - மணிச் சின்னத்தில்; சு.க. - கதிரைச் சின்னத்தில்!

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத்தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் கீழ் கதிரைச் சின்னத்திலேயே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி போட்டியிடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னதாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும், ஜே.வி.பியும் இணைந்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வெற்றிலைச் சின்னத்தில் தேர்தல் களத்தில் இறங்கத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

ஆனால், தேர்தல் தொடர்பில் ஜே.வி.பி. முன்வைத்த நிபந்தனைகளை சுதந்திரக்கட்சி ஏற்றுக்கொள்ள மறுத்த காரணத்தினால் தனித்துப் போட்டியிடுவதற்கு ஜே.வி.பி. முடிவு செய்தது.

இதனால் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பொதுஜன ஐக்கிய முன்னணியின் கீழ் நாற்காலி சின்னத்திலும், ஜே.வி.பி. தனது மணிச் சின்னத்திலும் தேர்தலில் போட்டியிடவுள்ளன.

இம்முறை பொதுத்தேர்தலில் முக்கிய மூன்று அணிகளான பொதுஜன ஐக்கிய முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி. ஆகியவை களத்தில் இருப்பதால் தேர்தல் களம் சூடாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. (க)

# அரச பேச்சுக் குழுப் பிரதிநிதிகளுக்கான நான்கு நாள் பயிற்சிப் பட்டறை ஆரம்பம்

கொழும்பு, பெப். 8

எதிர்வரும் 22, 23ஆம் திகதிகளில் ஜெனீவாவில் அரசுக்கும், புலிகளுக்குமிடையில் நடைபெறவுள்ள பேச்சுகளில் கலந்துகொள்ளவுள்ள அரச தூதுக் குழுவுக்கான நான்கு நாள் பயிற்சிப் பட்டறை நேற்று ஜனாதிபதி செயலகத்தில் ஆரம்பமானது.

நேற்றுக்காலை 9 மணிக்கு ஆரம்பமான இந்தப் பயிற்சிப் பட்டறையில் ஜனாதிபதியின் செயலாளர், பாதுகாப்பமைச்சின் செயலாளர், பேச்சுகளில் கலந்துகொள்ளவுள்ள மூன்று அமைச்சர்கள், முப்படைத் தளபதிகள், பொலீஸ் மா அதிபர், கூட்டுப்படைத் தளபதி, ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமயவின் பிரதிநிதிகள், அமைச்சர்களான பேரியல் அஷ்ரப், டக்ளஸ் தேவானந்தா உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

ஜெனீவாப் பேச்சுகள், அங்கு ஆராயப்பட வேண்டிய விடயங்கள், பேச்சுகளை முறிய விடாது எப்படி முன்னெடுத்துச் செல்லுதல்

(14ஆம் பக்கம் பார்க்க)

## வேட்பு மனுக்கள் நாளை முதல் ஏற்பு

ஏறாவூர், பெப்.8

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் நாளை வியாழக்கிழமை தொடக்கம் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களினால் ஏற்றுக் கொள்ளப்படவுள்ளன என தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் 22 தேர்தல் மாவட்டங்களிலும் வேட்பு மனுக்களை ஏற்றுக்கொள்வதற்கான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்

(14ஆம் பக்கம் பார்க்க)

# பேச்சில் கலந்துகொள்ளும் அரச குழுவுக்கு அமெரிக்க நாட்டு வல்லுநர்கள் பயிற்சி

கொழும்பு,பெப்.8

ஜெனீவாவில் நடைபெறும் அமைதிப் பேச்சுக்கான அரச குழுவுக்கு அமெரிக்க நாட்டு ஹவார்ட் திட்டத்தைச் சேர்ந்த சிறப்பு வல்லுநர்கள் பயிற்சி வழங்குகிறார்கள் என இணையத்தளச் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்குச் செல்லும் குழுவினர் நேற்று இந்தப் பயிற்சியில் ஈடுபட்டனர். இப்பயிற்சிகள் தொடர்ந்து நான்கு நாள்கள் வழங்கப்படுகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

அரச தரப்புக் குழுவிற்கு தலைமைதாங்கும் சுகாதாரத்துறை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவுக்கு பேச்சுகளின் அடிப்படை

(14ஆம் பக்கம் பார்க்க)

# பேச்சுக் குறித்து ஜே.வி.பி., ஹெல உறுமய நிபந்தனையேதும் விதிக்கவில்லையாம்

கொழும்பு,பெப்.8

விடுதலைப் புலிகளுடன் பேச்சுகளை ஆரம்பிக்க ஜே.வி.பியோ ஹெல உறுமயவோ எந்தவித நிபந்தனைகளை முன்வைக்கவில்லை என்று வர்த்தக அமைச்சரும் சமாதானப் பேச்சில் அரசின் பிரதிநிதியாகப் பங்குபற்ற இருப்பவருமான ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவித்தார். பி.பி.சியின் சிங்கள சேவைக்கு அளித்த பேட்டியில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பேச்சுகளை ஆரம்பிப்பது தொடர்பாக முன்னர் ஜே.வி.பி., ஹெல உறுமய ஆகியவை நிபந்தனைகளை விதித்து வந்தன. ஆனால், தற்போது ஆரம்பிக்கப்படும் பேச்சுகள் குறித்து

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பிள்ளைகளின் பெயர்களை தூயதமிழில் மாற்றுவோருக்கு நிதித்துறை ஊக்குவிப்பு

கிளிநொச்சி,பெப்.8

இந்த வருடம் ஜனவரி 14ஆம் திகதிமுதல் எதிர்வரும் நவம்பர் 27ஆம் திகதிவரையான காலப்பகுதியில் 10 வயதுக்கு கீழ் உள்ள சிறார்களுக்கு தூயதமிழில் பெயர் சூட்டுவதை மாற்றம் செய்வதை ஊக்குவிக்கும் திட்டம் ஒன்றை தமிழீழ நிதித்துறையினர் அறிமுகப்படுத்தியிருக்கின்றனர்.

இதன்படி குறிப்பிட்ட காலப்பகுதியில் தூயதமிழில் பெயர் வைக்கின்ற அல்லது பெயர்மாற்றம் செய்கின்ற பிள்ளைகளின் பெயரில் தமிழீழ வைப்பகத்தின் தமிழமுதம் கணக்கில் தலா ஆயிரம் ரூபா வீதம் வைப்பில் இடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ் 10 ஆயிரம் சிறார்களுக்கு தூய தமிழில் பெயர் சூட்டப்படுவதை ஊக்குவிப்பதற்கு தமிழீழ நிதித்துறையினர் திட்டமிட்டிருக்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு பெயர் சூட்டுவோர் தமிழீழ விடுதலைப் புலிகளால் வெளியிடப்பட்ட தூயதமிழ்ப் பெயர் அகர வரிசைப் புத்தகத்திலிருந்து பெயர்களைத் தெரிவுசெய்ய முடியும் என்றும் -

இல்லையேல் தாம் வைக்கின்ற பெயர் தூய தமிழ்ப்பெயர் என்பதை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் - அறிவிக்கப்பட்டது.

தமிழீழ நிதித்துறையினரின் இந்த வேண்டுகோளுக்கிணங்க தமது பிள்ளைகளின் பெயர்களைத் தூய தமிழில் மாற்றுவதற்கு பெரும் எண்ணிக்கையானோர் முன்வருகிறார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - குழந்தைகளுக்கு தூய தமிழில் பெயர்மாற்றம் செய்வதற்கு அதனைச் சட்டரீதியாகச் செய்துகொள்ள முடியும் என்று வட வலய உதவிப் பதிவாளர் நாயகம் சதாசிவ ஐயர் தெரிவித்துள்ளார்.

ஒன்று முதல் 7 வயது வரையான குழந்தைகளின் பெயரை மாற்றுவதாயின் பெயர் மாற்றப் படிவத்தைப் பூர்த்திசெய்து சத்தியக் கடதாசி ஒன்றினை இணைத்து செயலகத்தில் கையளித்தால் போதும் என்றும் -

7 முதல் 10 வயது வரையான பிள்ளைகளின் பெயர்களை மாற்றுவதற்கு இலங்கை தேசியப் பத்திரிகை ஒன்றில் விளம்பரம் செய்து அதன் பிரதியுடன் சத்தியக் கடதாசியை இணைத்து அனுப்பவேண்டும் என்றும் - அவர் தெரிவித்தார். (த)

## செயலமர்வுகள்

தன்மராட்சி,பெப்.8

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் யுனிசெவ் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் தரம் 4, 5, 6, 7, 8, 9 ஆகிய வகுப்பு மாணவர்களுக்கான இழந்த கல்வியை மீட்டல் செயற்றிட்டத்தின் கீழான செயலமர்வுகள் நாளை பி.ப. 2.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

தரம் 6 தொடக்கம் தரம் 9 வரையான வகுப்புகளில் தமிழ், கணிதம் ஆகிய பாடங்கள் கற்பிக்கும் ஆசிரியர்களும் தரம் 4, 5 வகுப்புகளில் தமிழ், கணிதம் கற்பிக்கும் பொருத்தமான ஆசிரியர்களும் இச் செயலமர்வில் கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார். (3-117)

# நுணாவிலில் காணாமற்போன இளைஞனை கைதுசெய்யவில்லை என்கிறது படைத்தரப்பு

நுணாவில் பகுதியில் காணாமற்போன இளைஞனை தாம் கைதுசெய்யவில்லை என இராணுவத்தினர் மறுத்துள்ளனர்.

கடந்தமாதம் 26ஆம் திகதி நுணாவில் பகுதியில் வைத்து செல்வரட்ணம் உதயராஜ் என்ற இளைஞன் காணாமற் போயிருந்தார்.

இது தொடர்பாக இளைஞனின் உறவினர் யாழ். மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்திருந்தனர்.

இந்த இளைஞன் தொடர்பாக மனித உரிமைக்குழுவின் யாழ். அலுவலக அதிகாரிகளுக்கும் இராணுவத்தின் 522ஆவது படைப்பிரிவின் அதிகாரிகளுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின்போதே மேற்படி இளைஞனை தாம் கைதுசெய்யவில்லையென்றும் -

இச்சம்பவத்திற்கும் தமக்கும் எவ்வித தொடர்பும் இல்லையென்றும் - இராணுவத்தினர் மறுப்புத் தெரிவித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (3-14-12)

## மணவாளக்கோல பெருவிழா

கோண்டாவில் மிஷன் பாடசாலை வீதி ஸ்ரீ சாமுண்டாதேவி சமேத ஞானவைரவர் ஆலயத்தில் மணவாளக்கோலப் பெருவிழா நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

காலை அஷ்டோத்திர சங்காபிஷேகம், விசேட பூசைகள் என்பன இடம்பெறும்.

மாலை வசந்தமண்டபப் பூசை இடம் பெற்று வைரவப் பெருமான் தெருவீதியுலா வருவார். (3-13-15-204)



தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணியாளர்கள் கடத்தப்பட்டமைக்குக் கண்டனம் தெரிவித்தும் ஸ்ரீலங்கா அரசின் சமாதான விரோதச் செயற்பாடுகளைக் கண்டித்தும் முழங்காவில் அன்னபுரத்தில் அரச உயர் பீடத்தை குறிக்கும் கொடும்பாவிகள் அப் பகுதி மக்களால் நேற்றுமுன்தினம் எரிக்கப்பட்டன.

அப்போது எடுக்கப்பட்ட படங்களை இங்கு காணலாம். (படங்கள்:- ச.உதயசங்கர் வெள்ளாங்குளம் செய்தியாளர்)

# குருநகர் மீனவர் நால்வர் கடற்படையினரால் கைது

யாழ்ப்பாணம், பெப்.8

கடற்றொழிலுக்குச் சென்ற குருநகரைச் சேர்ந்த 4 மீனவர்களை கடற்படையினர் கைதுசெய்து ஊர்காவற்றுறைப் பொலீஸாரிடம் ஒப்படைத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் இரவு குருநகர் பகுதியில் இருந்து கடற்றொழிலுக்கெனச் சென்ற இந்த மீனவர்கள் வீடு திரும்பாததையடுத்து உறவினர்களால் நேற்று மாலை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதனையடுத்து மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட இணைப்பதிகாரி றோகித பிரியதர்சன, கடற்படையினருடன் தொடர்பு கொண்டார்.

சம்பந்தப்பட்ட மீனவர்களைத் தாம் கைது செய்து ஊர்காவற்றுறைப் பொலீஸாரிடம் ஒப்படைத்தனர் எனக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர் என்று இணைப்பதிகாரி கூறினார்.

குருநகரைச் சேர்ந்தவர்களான பெருமாள் சந்திரபோஸ் (வயது 24), இம்மானுவேல் அன்ரனி ஜூட் (வயது 27), பாக்கியநாதன் நிரஞ்சன் (வயது 28), கோபாலசாமி ராஜ்குமார் (வயது 23) ஆகிய மீனவர்களே கடற்படையினரால் கைது செய்யப்பட்டவர்களாவர். (3-12)

# ஜயலத் இன்று யாழ். வருகிறார்

ஐ.தே.கட்சியின் நிவாரண மற்றும் மனித உரிமைகள் குழுவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜயலத் ஜயவர்த்தன இன்று யாழ்ப்பாணம் வருகின்றார்.

ஏ-9 பாதையூடாக வரும் இவர் ஆழிப் பேரலை, சூறாவளி, வெள்ளம் போன்ற இயற்கை அனர்த்தங்களின்போது மக்களை முன்னெச்சரிக்கை செய்யும் ஆபத்து அறிவிப்பு 'சைரன்' ஒலிக்கருவிகளை வழங்கவுள்ளார்.

இன்று காலை 9 மணிக்கு யாழ். ஆயர் இல்லத்துக்கு அருகில் உள்ள மறைக்கல்வி நிலையத்தில் இக்கருவிகளைக் கையளிக்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந்தக் கருவிகளைக் கொள்வனவு செய்ய உதவி வழங்கியுள்ள ஜேர்மன் சமூக சேவை அமைப்பின் பிரதிநிதிகளும் இந்நிகழ்வில் கலந்துகொள்ளவிருக்கின்றனர்.

குடாநாட்டில் இத்தகைய 20 கருவிகள் பொருத்தப்படவிருக்கின்றன. (3)

# முதுகலைமாணி அனுமதிப் பரீட்சை 13ஆம் திகதி முதல் மூன்று தினங்கள்

யாழ்ப்பாணம், பெப்.8

யாழ். பல்கலைக்கழக பட்டப்பின் படிப்புகள் பீட முதுகலைமாணி 2005 - 2006 கல்வி ஆண்டுக்கான கற்கைநெறிக்கு அனுமதிப்பதற்கான எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் 13ஆம் திகதி முதல் மூன்று தினங்கள் யாழ். பல்கலைக்கழக பட்டப்பின் படிப்புகள் பீடத்தில் நடைபெறவுள்ளன.

ஆங்கில மொழி மூலத்தில் யாழ். பல்கலைக்கழகத்தில் கற்கைநெறியை மேற்கொள்ள விண்ணப்பித்தவர்களுக்கு எதிர்வரும் 13ஆம் திகதி திங்கட்கிழமையும் -

தமிழ்மொழி மூலத்தில் யாழ். பல்கலைக்கழகத்தில் கற்கைநெறியை மேற்கொள்ள விண்ணப்பித்தவர்களுக்கு எதிர்வரும் 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும்-

தமிழ் மொழி மூலத்தில் வவுனியா வளாகத்தில் கற்கை நெறியை மேற்கொள்ள விண்ணப்பித்தவர்களுக்கு எதிர்வரும் 15ஆம் திகதி புதன்கிழமையும்- ;

முற்பகல் 9 மணிக்கும் முற்பகல் 11 மணிக்கும் இரு அமர்வுகளாக இந்தநேர்முகப் பரீட்சைகள் நடத்தப்படவுள்ளன என்று பட்டப்பின்படிப்புகள் பீடாதிபதி க.கந்தசாமி தெரிவித்தார்.

இந்த நேர்முகப் பரீட்சைக்கு யாழ். பல்கலைக் கழக ஆங்கில மொழி மூலத்தில் 69 பேருக்கும் யாழ். பல்கலைக்கழக தமிழ் மொழி மூலத்தில் 70 பேருக்கும் வவுனியா வளாகத்தில் தமிழ் மொழி மூலத்தில் 67 பேருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

- நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் யாழ். பல்கலைக் கழக உயர் பட்டப்பின் படிப்புகள் பீட விளம்பரப் பலகையில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது என்றும் - தெரிவிக்கப்பட்டது. (3-12)

## பரிசளிப்புவிழாவும் நிறுவுனர் தினமும்

சங்கானை,பெப்.8

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவும் நிறுவுனர் நாள் நிகழ்வும் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலையின் மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இந்த வித்தியாலயத்தின் அதிபர் திருமதி ச.யோகேஸ்வரன் தலைமையில் இடம் பெறும் இந் நிகழ்வில் வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி நா.நாகராசா பிரதம விருந்தினராகவும் சங்கானைக் கோட்டக் கல்வி முன்னாள் பணிப்பாளர் சி.செல்லையா சிறப்பு விருந்தினராகவும் நிறுவுனர் குடும்பத்தைச் சேர்ந்த சி.சண்முகராசாவும், நலன்விரும்பி ...ராசாவும் கௌரவ விருந்தினர்களாவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

# கடந்த ஆண்டு 51,151 வாகனங்கள் பதிவு

யாழ்ப்பாணம்,பெப்.8

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகத்தில் கடந்த ஆண்டு 51ஆயிரத்து 151 வாகனங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன என மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள உதவி ஆணையாளர் வே.பத்மநாதன் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு யாழ். மாவட்டத்தில் 40 ஆயிரத்து 234 மோட்டார் சைக்கிள்களும் 2ஆயிரத்து 403 மோட்டார் கார்களும் 2 ஆயிரத்து 465 விவசாய வாகனங்களும் ஆயிரத்து 267 லாண்ட் மாஸ்ரர் வாகனங்களும் ஆயிரத்து 505 லொறிகளும் 819 மினி பஸ்களும் ஆயிரத்து 702 ஓட்டோக்களும் 756 இரட்டைப் பாவனை வாகனங்களும் பதிவுசெய்யப்பட்டுள்ளன என்று அவர் தெரிவித்தார். (ஒ-202-203)

# வி.பி. கிண்ணக் கிரிக்கெட் போட்டி: இறுதியாட்டத்துக்கு இலங்கை தகுதி

## தென்னாபிரிக்காவை தோற்கடித்தது

ஹோபர்ட்,பெப்.8

ஆஸ்திரேலியாவில் இடம்பெற்றுவரும் வி.பி. கிண்ணத்துக்கான சர்வதேச ஒருநாள் முக்கோணக் கிரிக்கெட் போட்டித் தொடரின் நேற்றைய ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணியை 76 ஓட்டங்களால் தோற்கடித்தது இலங்கை அணி. இதன் மூலம் இறுதியாட்டத்துக்கு இலங்கை அணி தகுதி பெற்றது.

ஹோபர்டில் நடந்த நேற்றைய ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அதன்படி 50 ஓவர்களின் முடிவில் 9 விக்கெட்டுகள் இழப்பிற்கு 257 ஓட்டங்களை இலங்கை அணி பெற்றது. இதில் அதிக பட்சமாக அணித் தலைவர் மாவன் அத்தப்பத்து 80 ஓட்டங்களையும் குமார் சங்ககார 62 ஓட்டங்களையும் குவித்தனர்.

தென்னாபிரிக்க அணியின் பந்துவீச்சில் அதிகபட்சமாக ஏ.ஜே.ஹால் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். வெற்றிபெற 258 ஓட்டங்கள் தேவை என்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 43.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 181 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

இதன்மூலம் இலங்கை அணி 76 ஓட்டங்களால் ஆட்டத்தில் வெற்றிபெற்ற இலங்கை அணி 0.04 என்ற ஓட்ட சராசரியுடன் 14 புள்ளிகளைப் பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

ஏற்கெனவே 0.78 என்ற ஓட்ட சராசரியுடன் 27 புள்ளிகளைப் பெற்றுள்ள ஆஸ்திரேலிய அணியுடன் 3 ஆட்டங்களைக் கொண்ட இறுதிச் சுற்றின் முதலாட்டத்தில் எதிர்வரும் 10ஆம் திகதி இலங்கை அணி மோதவுள்ளது.

இந்தச் சுற்றின் இரண்டாவது ஆட்டம் எதிர்வரும் 12ஆம் திகதி இடம்பெறவுள்ளது. இரு ஆட்டங்களிலும் ஒரே அணி வெற்றி பெறாத நிலை ஏற்பட்டால் மூன்றாவது ஆட்டம் எதிர்வரும் 14ஆம் திகதி நடத்தப்படும். (ஒ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# நான்கு வருட முயற்சிகளை வீணாக்கிய மூன்று தலைவர்கள்

இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுகள் மீண்டும் பெப்ரவரி 22, 23ஆம் திகதிகளில் ஜெனிவாவில் நடைபெறவிருக்கின்றன.

இலங்கை சமாதான முயற்சிகள் 'சுத்திச் சுத்தி சுப்பரின் கொல்லைக்குள்' என்ற மாதிரி நான்கு வருடங்கள் ஒரு சுற்றிச் சுழன்று கொண்டு மீண்டும் ஆரம்பப் புள்ளிக்கு வந்து நிற்கின்றன.

இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் 2002 பெப்ரவரி 22ஆம் திகதி கைச்சாத்தானது. சரியாக நான்கு ஆண்டுகள் கழிந்து 2006 பெப்ரவரி 22ஆம் திகதி ஜெனிவாவில் பேச்சுகள் ஆரம்பமாகப் போகின்றன. அங்கு எது குறித்துத்தான் பேசப் போகின்றார்கள்?

நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் கைச்சாத்தான - போர் நிறுத்தத்துக்கு வழி செய்த - புரிந்துணர்வு ஒப்பந்த ஏற்பாடுகளின் நடைமுறைப்படுத்தலை எவ்வாறு மேம்பாடடையச் செய்யலாம் என்றுதான் பேசப்போகின்றார்கள்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான சமாதானப் பேச்சுகளை முன்னெடுப்பதற்கு வசதியாகவே போர்நிறுத்தம் செய்யப்பட்டது. அதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

ஆனால், அந்த சமாதான முயற்சிகள் குறிப்பிடத்தக்க அளவுக்கேனும் முன் நகரவில்லை. மாறாக, நான்கு ஆண்டுகள் கழிந்த பின்னரும், சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்காக நடைமுறைப்படுத்தப்பட்ட யுத்த நிறுத்த ஏற்பாடுகளை எவ்வாறு செம்மையாக நடைமுறைப்படுத்தலாம் என்பது குறித்து மீண்டும் பேசும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

இந்தப் பின்னடைவுகளுக்குக் காரணம் யார்?

தென்னிலங்கையின் ஆட்சி அதிகாரத்தை அண்மைக் காலத்தில் தக்க வைத்திருந்த - அல்லது வைத்திருக்கின்ற - மூன்று சிங்களத் தலைவர்களே தற்போதைய நான்கு ஆண்டு கால சமாதான முயற்சிகள் பின்னிலை கண்டதற்குப் பொறுப்பேற்க வேண்டும்.

வெறும் நாடாளுமன்றப் பெரும்பான்மையை வைத்துக் கொண்டு தற்போதைய அமைதிப் பேச்சு முயற்சிகளை ஆரம்பித்த முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அதிகார வறுமைக்குள் சிக்கி நின்று, சமாதான முயற்சிகளை முன் நகர்த்த முடியாதவராகத் தடுமாறினார். அப்போது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக இருந்த சந்திரிகாவுடன் பகையுறவு கொண்டிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் ஜனாதிபதி சந்திரிகாவின் நிறைவேற்று அதிகாரங்களை மீறி எதையும் செய்ய முடியவில்லை. சர்வ அதிகாரமும் படைத்த அரசுத் தலைவருடன் முரண்பட்டு நின்றதால் ரணிலின் நிர்வாகம் பல முட்டுக் கட்டைகளை எதிர்கொண்டது. ஜனாதிபதி சந்திரிகா கைச்சாத்திடாத யுத்த நிறுத்த ஒப்பந்த விதிகளை முப்படைகளின் தளகர்த்தரான ஜனாதிபதியின் கீழ் இயங்கும் படைகள் வேண்டுமென்றே அசட்டை செய்தன; கடும் போக்கைக் கடைப்பிடித்து சுமுக நிலையைக் குழப்பின. இவற்றுக்கு மத்தியில் பிரதமர் ரணிலின் அரசு தனது இயலாத்தன்மையையும், கையாலாகாத்தனத்தையும் மூடி மறைப்பதற்காக, அமைதி முயற்சிகளை ஆக்கபூர்வமான திசையில் முன்னெடுப்பதற்குப் பதிலாக, சர்வதேச சமூகத்தின் தலையீடு, நெருக்குவாரம் ஆகியவை மூலம் தமிழர் தரப்புப் பிரதிநிதிகளான புலிகளை மட்டுப்படுத்தி, கட்டுப்படுத்தி, அமுக்கும் தனது அந்தரங்கத் திட்டமான 'சர்வதேச வலைப்பின்னலை'ப் பின்னியது.

தமிழர்களின் இனப் பிரச்சினையை நேர்மையுடன் பேசித் தீர்க்கும் பக்குவமும், அதிகாரமும், திறமும் அற்ற ரணில் நிர்வாகம், அமெரிக்கா தலைமையிலான உலக நாடுகளை அணிசேர்த்து புலிகளைப் பொறியிட முனைந்ததன் மூலம் இந்த முயற்சிகள் முடங்கக் காரணமாயிற்று. இந்த வகையில் தவறிழைத்திருக்கிறார் ரணில்.

ரணிலின் அரசு சமாதான முயற்சிகளை சுதந்திரமாகவும், சுயாதீனமாகவும் முன்னெடுக்க விடாமல் தனக்குக் கீழிருந்த முப்படைகளையும், தனது நிறைவேற்று அதிகாரங்களையும் வைத்துக் கொண்டு திரைமறைவில் முட்டுக் கட்டைகளைப் போட்டு தில்லுமுல்லு பண்ணியதன் மூலமும் -

அமைதி முயற்சிகளின் காத்திரமான கட்டமாக எட்டப்பட்ட 'வடக்கு-கிழக்கு தன்னாட்சி அதிகார சபை' பற்றிய யோசனைத் திட்டத்தை ரணிலின் அரசும், புலிகளும் கூடிப் பரிசீலிக்க இணங்கியிருந்த சமயத்தில், அந்த அரசின் அதிகாரங்களைப் பறித்து இந்த முயற்சிகளைக் குலைத்து, பின்னர் ரணிலின் அரசைக் கலைத்ததன் வாயிலாகவும்-

அதன் பின்னர், பௌத்த, சிங்களப் பேரினவாதிகளை, சமாதான முயற்சிகளுக்கு எதிரான கோஷத்தோடு கூட்டுச் சேர்த்து, அதன் மூலம் அரசைக் கைப்பற்றி, அமைதி முயற்சிகளுக்கான வாய்ப்புகளுக்கு ஆப்பு வைத்ததன் மூலமும் -

இந்த சமாதான நடவடிக்கைகளை பயனற்றதாக்கினார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா

பிரதமர் ரணிலின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற சமாதான முயற்சிகளின் போது எட்டப்பட்டிருந்த கொஞ்சநஞ்ச ஆக்கபூர்வமான முடிவுகளையும் அடியோடு நிராகரிக்கும் வகையிலான நிலைப்பாட்டைத் தனது தேர்தல் விஞ்ஞாபனச் சிந்தனையாக முன்வைத்து, அதன் மூலம் பேரினவாத சக்திகளை ஆகர்ஷித்து, அவற்றின் ஆதரவோடு ஜனாதிபதிப் பதவியைக் கைப்பற்றியிருக்கின்றார் மஹிந்த ராஜபக்ஷ. தமது தேர்தல் சிந்தனையை நடைமுறைப்படுத்தும் விதத்தில், கடந்த நான்கு ஆண்டுகளாக அமைதி முயற்சிக் களத்தில் எட்டப்பட்ட ஒரு சில ஆக்கபூர்வ விடயங்களைக் கூட முற்றாகத் தூக்கி வீசிக் கடாசி விட்டு, 'எல்லாம் புதிதாக' என்ற நிலைப் போக்கை முன்வைத்திருக்கிறார் அவர்.

இதனால், இந்த நான்கு வருட சமாதான நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்ப நிலைக்கே - பூச்சியப் புள்ளிக்கே - வந்து நிற்கின்றன.

இந்த நான்கு வருட சமாதான முயற்சிகளும், ஓய்வைத் தவிர வேறு எந்த நன்மையையும் தராமல், விழலுக்கு இறைத்த நீராகியமைக்கு இந்த மூன்று தலைவர்களுமே - ரணில், சந்திரிகா, மஹிந்த ஆகியோரே - காரணம் என்பது தெளிவு.

அமைதி முயற்சிகளை முன்னெடுங்கள் என்று எப்போதும் கூப்பாடு போடும் சர்வதேச சமூகம் இந்த உண்மையைப் புரிந்து கொள்வது நல்லது.

# போராளிகள் போன்று நடித்தவர்கள் கோண்டாவிலில் கொள்ளை முயற்சி

## வீட்டு உரிமையாளர் அடித்து விரட்டினார்


வலி.வடக்கு,பெப்.8

போராளிகள் என்று கூறி போலித் துப்பாக்கியைக் காட்டி கொள்ளையிட முயன்றவர்களை வீட்டு உரிமையாளர் அடித்து விரட்டினார்.

கடந்த நான்கு நாள்களுக்கு முன்னர் கோண்டாவில் கிழக்கு, இருபாலை வீதியில் அமைந்துள்ள வீடொன்றில் இச்சம்பவம் இடம்பெற்றது.

சம்பவ தினத்தன்று பிற்பகல் 2 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர்கள் குறிப்பிட்ட வீட்டிற்கு வந்தனர். தங்களைப் போராளிகள் என்று கூறிக்கொண்ட அவர்கள் துப்பாக்கியைக் காட்டி மிரட்டியபடி வீட்டுக்குள் நுழைந்தனர்.

வீட்டு உரிமையாளருடன் ஒருவர் நிற்க மற்றவர் அறைகளுக்குள் சென்றார். இதனால் அவர்கள் போராளிகள் போல நடித்து திருடவந்தவர்கள் என்று புரிந்து கொண்ட வீட்டு உரிமையாளர் கதவு பூட்டப் பயன்படுத்தப்படும் குறுக்குச் சட்டத்தை எடுத்து தனக்கருகே நின்றவரை தாக்கியுள்ளார். அவர் அலறவே மற்றவர் ஓடி வந்து வீட்டு உரிமையாளரைத் தாக்க முயன்றார். அந்த இழுபறியில் இளைஞரின் கைவிரல் வீட்டு உரிமையாளரின் வாய்க்குள் சிக்கியது. இதில் விரலில் படுகாயமடைந்த இளைஞரும் சகாவும் தமது மோட்டார் சைக்கிளில் தப்பி ஓடிவிட்டார்கள். இச்சம்பவம் குறித்து கிராம அலுவலர் மற்றும் கோப்பாய் பொலீஸாரிடம் வீட்டு உரிமையாளர் முறையிட்டுள்ளார். (ஒ-86)



நேற்றுமுன்தினம் மல்லாகம் மயூரன் மன்றத்துக்கு அருகில் இராணுவ வாகனமும் இலங்கை போக்குவரத்து சபையின் பஸ்ஸும் மோதிக்கொண்டன.இராணுவ வாகனம் முன் சக்கர அச்சு உடைந்தமையால் கட்டுப்பாடு இழந்து எதிரே பஸ்ஸுடன் மோதியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதன்போது பஸ்ஸில் அதிக எண்ணிக்கையான பயணிகள் இருந்த போதிலும் அதிர்ஷ்டவசமாக எவரும் காயமடையவில்லை.இதனைத் தொடர்ந்து அப்பகுதியில் அதிக எண்ணிக்கையான இராணுவத்தினரும் பொலீஸாரும் குவிக்கப்பட்டு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டது. பஸ்ஸுடன் மோதுண்ட இராணுவ வாகனத்தையும் அதனை அப்புறப்படுத்துவதில் படையினர் ஈடுபட்டிருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)

# காக்கைதீவில் தயாராகும் பசளையை சந்தைப்படுத்துவதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.8

யாழ்.மாநகர சபையினரால் கழிவுப் பொருள்களைக் கொண்டு தயாரிக்கப் பட்டுவரும் சேதனப் பசளைகளை சந்தைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இத்தகவலை மாநகர ஆணையாளர் சீ.வீ.கே. சிவஞானம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மாநகர சபையினரால் நகரப் பகுதியில் அகற்றப்படும் கழிவுப் பொருள்களைக் கொண்டு சேதனப் பசளை தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று காக்கைதீவுப் பகுதியில் இயங்கிவருகிறது.

இங்கு பசளை தயாரிக்கும் பணிகள் தற்போது நடைபெற்றுவருகின்றன.

தயாரிக்கப்பட்டுள்ள பசளைகளை, விவசாயிகள் மத்தியில் சந்தைப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

இதற்காக விவசாய சம்மேளனங்களின் பிரதிநிதிகள், விவசாயத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ஆகியோருடன் கலந்துரையாடி பசளைகளை எவ்வாறு எந்த முறையில் சந்தைப்படுத்துவது என்பது தொடர்பாகத் தீர்மானம் எடுக்கவுள்ளோம் - என்றார். (த-13)

# புங்குடுதீவு அரசினர் ஆஸ்பத்திரிக்கு இலவசமாகக் குடிதண்ணீர் தருக !

## வைத்தியசாலை அபிவிருத்திச்சபை அரச அதிபரிடம் வேண்டுகோள்

புங்குடுதீவு,பெப்.8

புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலைக்கு குடிதண்ணீர் இலவசமாக விநியோகிக்க நடவடிக்கை எடுக்குமாறு மருத்துவமனை அபிவிருத்திச் சபை யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷிடம் வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

மாதாந்தம் இந்த ஆஸ்பத்திரிக்கு ஆயிரத்து 500 கலன் குடிதண்ணீர் தேவை என்றும்- அதனை இலவசமாக வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் கேட்கப்பட்டிருக்கிறது.

அத்துடன், இந்த ஆஸ்பத்திரியில் பல வருடங்களாக அழிந்த நிலையில் உள்ள கட்டடங்கள் தற்போது திருத்தியமைக்கப்படுகின்றன. எதிர்வரும் மாசிமாதம் 20ஆம் திகதி தொடக்கம் பூரணமாக இயங்க உதவுமாறும் கேட்கப்பட்டிருக்கிறது.

இங்கு ஒருவகைப் பூச்சி மற்றும் நுளம்புத் தொல்லைகளினால் சிறுவர்கள் உட்பட அனைவரும் பெரும் இன்னல்களுக்கு உள்ளாகின்றனர். எனவே, ஒவ்வொரு குடும்பத்திற்கும் நுளம்பு வலைகளையும் பற்சிகிச்சைக்கான உபகரணங்களையும் பெற்றுத் தருமாறும் அரச அதிபரிடம் கேட்கப்பட்டிருக்கிறது.

வைத்தியசாலையில் ஆளணிப் பற்றாக்குறை நிலவுகிறது. இந்தப் பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். நோயாளரின் வசதி கருதி அம்புலன்ஸ் வண்டி ஒன்றும் வழங்கப்பட வேண்டும். அதுமட்டுமன்றி வைத்தியசாலைக்கு மின்சார இணைப்பு வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

இவ்வாறு அரச அதிபரிடம் புங்குடுதீவு வைத்தியசாலை அபிவிருத்திச் சபை மேலும் கேட்டிருக்கிறது. (த-111)

### உதயவாக்கு

உயர்வடைய வேண்டும் என்று எண்ணினால் முதலில் அடுத்தவனை விமர்சிப்பதை நிறுத்து. ஓர் அறிஞர்.

### நாளை

தை 27
வியாழக்கிழமை
09.02.2006
திதி: துவாதசி
பின்னிரவு: 05.55
நட்சத்திரம் : திருவாதிரை
பின்னிரவு: 03.39 வரை
சுபநேரம் : 08.05-09.35
ராகுகாலம் : 02.55 - 03.35
(யாவும் பழைய நேரப்படி)

# கிளிநொச்சியில் போட்டியிடுவோர் அங்கேயே வேட்பு மனுத் தாக்கல்

யாழ்ப்பாணம்,பெப்.8

யாழ். மாவட்டத் தேர்தல் தொகுதியிலுள்ள கிளிநொச்சி மாவட்டத்தின் உள்ளூராட்சி அமைப்புகளுக்கான தேர்தலில் போட்டியிடவுள்ள அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்கள் தமது வேட்புமனுக்களைக் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் தாக்கல் செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

இத்தகவலை உதவித் தேர்தல் ஆணையாளர் பொ.குகநாதன் தெரிவித்தார்.

விரைவில் நடத்த அறிவிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் போட்டியிடவுள்ள கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்கள் நாளை வியாழக்கிழமை காலை தொடக்கம் எதிர்வரும் 16ஆம் திகதி வியாழக்கிழமை வரை தமது வேட்புமனுக்களைத் தாக்கல் செய்யமுடியும்.

யாழ். மாவட்டத் தேர்தல் தொகுதியில் யாழ். மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி அமைப்புகளுக்கான தேர்தலில் போட்டியிடவுள்ளவர்கள் தமது வேட்புமனுக்களை உதவித் தேர்தல் ஆணையாளரிடம் கையளிக்கவேண்டும்.

கிளிநொச்சி மாவட்டத்தில் போட்டியிடவுள்ளவர்கள் தமது வேட்பு மனுக்களைக் கிளிநொச்சி மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலரான மாவட்ட அரச அதிபரிடம் கையளிக்கவேண்டும். இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன - இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-202-2[illegible])

## காணாமற்போன இளைஞர் திரும்பினார்

காணாமற் போனதாக மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்ட கண்ணிவெடி அகற்றும் நிறுவனப் பணியாளர் நேற்று வீடு திரும்பினார் என்று அவரது உறவினர்களால் நேற்றுத் தெரிவிக்கப்பட்டது. நாவற்குழி தெற்கு கைதடியைச் சேர்ந்த குணரத்தினம் லூகிதாஸ் (வயது 23) என்ற இளைஞரே கடந்த சனிக்கிழமை முதல் காணாமற் போயிருந்தார்.

தொழில் நிமித்தம் கொழும்பு சென்றிருந்த இவர் வீட்டுடன் தொடர்பு கொள்ளாததை அடுத்து, இவர் வழமையாகத் தங்கும் விடுதியுடன் தொடர்பு கொண்டனர். அப்போது இவர் அங்கு வந்து சேரவில்லை எனக்கூறப்பட்டதையடுத்துதே, உறவினர்கள் நேற்று முன்தினம் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ் அலுவலகத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

இது தொடர்பாக நேற்றைய உதயனில் வெளியான செய்தியில் இந்தஇளைஞனின் பெயர் தவறுதலாக குணரத்தினம் சுரேஸ் என இடம்பெற்றுவிட்டது.(ஐ-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி புனித நகரில் புதிய பாடசாலை விரைவில்

யாழ்ப்பாணம் பெப்.8

வடமராட்சிப் புனித நகரில் புதிய பாடசாலை ஒன்றை அமைப்பதற்கு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராசா நடவடிக்கை மேற்கொண்டுவருகிறார்.

புனித நகரில் சுமார் 175 குடும்பங்கள் தங்கியுள்ளன. இவர்களின் பிள்ளைகள் கல்வி கற்பதாயின் கற்கோவளம் மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு செல்லவேண்டும்.

புனித நகரிலிருந்து கற்கோவளத்துக்கான பஸ் சேவை எதுவும் இடம்பெறுவதில்லை. இதனால் மாணவர்கள் நீண்ட தூரம் நடந்து செல்ல வேண்டியுள்ளது.

இத்தகைய நிலையினைக் கருத்திற்கொண்டு இப்பகுதியில் உள்ள மாணவர்கள் எவரும் பாடசாலைக்குச் செல்வதில்லை.

இதுதொடர்பான தமது பிரச்சினைகளை இப்பகுதி மக்கள் கடிதம் மூலம் வலயக் கல்விப் பணிப்பாளரிடம் சமர்ப்பித்திருந்தனர்.

புனித நகருக்கு விஜயம் செய்த வலயக் கல்விப்பணிப்பாளர் அங்கு பாதிக்கப்பட்ட மாணவர்களின் விவரங்களைத் திரட்டினார்.

மாணவர்களின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு அந்த இடத்தில் புதிய பாடசாலை ஒன்றினை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார்.

இந்தப் பாடசாலையை அமைப்பதற்கான நிதி உதவியினை 'யுனிசெவ்' நிறுவனம் வழங்கவுள்ளது.

தரம் ஒன்று முதல் 5 வரை இயங்க உள்ள இப்பாடசாலையை அமைப்பதற்கான வேலைகள் யாவும் அடுத்த மாத முற்பகுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ13)

உ
சிவமயம்

## விவாஹ சுபமுகூர்த்த அழைப்பு

அன்புடையீர்!

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான பார்த்திப வருஷம் தை மாதம் 28 ம் நாள் (10-02-2006) வெள்ளிக்கிழமை வளர்பிறை திரியோதசி திதியும், புனர்பூச நட்சத்திரமும், சித்த யோகமும் கூடிய (புதியநேரம்) மு.ப. 9.15 மணி முதல் 10.45 மணிவரையுள்ள மீன இலக்கின சுபமுகூர்த்தவேளையில்

அமரர் புலவர் கா. வேல்முருகன் (B.O.L)
திருமதி. வேல்முருகன் நாகேஸ்வரி தம்பதிகளின்
கனிஷ்ட புத்திரன்
திருநிறைச் செல்வன்
**சத்தியநாராயணன்** (சத்தியன்)
அவர்களுக்கும்



திரு. திருமதி. புஷ்பதேவன் தம்பதிகளின்
சிரேஷ்ட புத்திரி
திருநிறைச் செல்வி
**தாரணி**
அவர்களுக்கும்

எல்லாம் வல்ல இறைவன் திருவருள் கொண்டு திருமணம் செய்ய பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு யாழ்ப்பாணம் நாயன்மார்கட்டு ஸ்ரீ ராஜராஜேஸ்வரி (பேச்சி) அம்பாள் அட்சய சுரபி ஆலய மண்டபத்தில் நடைபெறவிருக்கும் திருமண வைபவத்தில் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை வாழ்த்தி ஆசீர்வதித்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்

திருமதி. வேல்முருகன் நாகேஸ்வரி
"வள்ளுவர் மனை"
செட்டிகுறிச்சி, பண்டத்தரிப்பு.
தொடர்பு:- 0777 279089, 0777 917831

திரு. திருமதி. புஷ்பதேவன்
திருமதி இரகுநாதன், பிள்ளைகள்
58, பழம் றோட், கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(இரு வீட்டார் அழைப்பு)


## இன்னும் நீங்கள் தாமதிக்கிறீர்களா ???



A/L தகைமைகளுடன் மாத்திரம் வெளிநாட்டு உயர் கல்வியினைப் பெற முயற்சி செய்கின்ற மாணவர்களில் அனேக மானோர் பிரபல பல்கலைக் கழகங்களில் அனுமதி பெறுவதிலும் (Admission) உயர்கல்விக்கான வாய்ப்புக் களைப் பெறுவதிலும் தவறிவிடுகின்றனர். சர்வதேச அங்கீகாரமுள்ள EDEXCEL, UK வழங்கும் BTEC HND தகைமை உலகின் பிரசித்தி பெற்ற பல பல்கலைக்கழகங்களில் B.Sc (Hons) பட்டப்படிப்பின் இறுதியாண்டிற்கான நேரடி அனுமதியைப் பெற்றுத்தருவதோடு [illegible] வாய்ப்புக்களையும் உறுதிசெய்கின்றது. அதுமட்டுமல்லாது HND தகைமையைப் பெற்றுக் கொண்டவர்கள் போட்டி மிகுந்த வேலைவாய்ப்புச் சந்தையில் இலகுவில் தகுதியான வேலைகளைத் தட்டிச் செல்கின்றனர்.

### புதிய பிரிவுகள் ஆரம்பம் : 11.02.2006



இ. லாவண்யா
மீசாலை

பல்கலைக்கழக அனுமதி கிடைக்கத்தவறி இருந்த வேளையில் எனது நண்பிகளில் சிலர் வெளியிடங்களுக்குச் சென்று பல்வேறு உயர்கல்விகளை மேற்கொள்ளத் தொடங்கினர். இன்றைய சூழ்நிலையில் என்போன்ற மாணவர்கள் வெளியிடங்களுக்குச் சென்று உயர்கல்வியைத் தொடர்வது மிகவும் கடினமானதொரு விடயமாக இருந்தது. இன்றைய நூற்றாண்டில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்து விளங்கும் கணனித்துறையில் உயர்கல்வியைக் கற்கும் நோக்குடன் இருந்த எனக்கு IIS நிறுவனத்தில் ஆரம்பிக்கப்பட்ட BTEC HND கற்கைநெறி கைகொடுத்து உதவியது.

கணனி சம்பந்தமான அடிப்படை அறிவு எதுவுமற்ற நிலையில் நான் IIS இனுள் நுழைந்தேன். அந்த நிலை இன்று என்னைப் பொறுத்தவரையில் முற்றாக மாறிவிட்டது என்றே கூறலாம். இக்கற்கை நெறியானது முற்றிலும் வேறுபட்ட கற்பித்தல் முறைமையைக் கொண்டிருப்பது இதன் சிறப்பம்சமாகும். தகவல் தொழில்நுட்பம் சார்ந்த விடயங்களை நாம் கற்றுக்கொள்ளக் கூடியதாக இருப்பதோடு மட்டுமல்லாது அவற்றைத் தக்க தருணத்தில் தகுந்த முறையில் பயன்படுத்திக் கொள்வது, தலைமைத்துவப்பண்பு, தன்னம்பிக்கை மற்றும் குழுவாக இணைந்து செயற்படும் தன்மை என்பவற்றையும் அறிந்து கொள்ளமுடிகிறது.

IIS இல் HND கற்கைநெறிக்குரிய அனைத்து வசதிகளும் செவ்வனே செய்துகொடுக்கப்படுகின்றன. சிறந்த அனுபவமும் தராதரமும் கொண்ட விரிவுரையாளர்கள் மத்தியில் இக்கற்கைநெறியை மேற்கொள்ளக்கூடிய வாய்ப்பு எனக்குக்கிட்டியமையிட்டு நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

BTEC HND
World Class Qualifications
Delivered Locally...... Recognised Globally

B.Sc ( Hons ) / BEng ( Hons )
1 year at leading Universities in UK, USA, Australia, Canada etc.

BTEC HND
Computing / Software Engineering / Business Information Technology ( 1½ years )

GCE A/L
with 2 Subjects

edexcel INTERNATIONAL
Approved Training Centre

IIS CITY CAMPUS
# 181, Navalar Road, Jaffna
TP No. : 021 222 806


# யாழ்.முகவரியுடன் வவுனியாவில் வாகனப் பதிவு செய்தோருக்கு

யாழ்.மாவட்ட முகவரியுடன் வவுனியா மாவட்டச் செயலகத்தில் பதிவுசெய்யப்பட்ட மோட்டார் வாகனங்களுக்கான இலக்கங்கள் கிடைக்காதவர்களுக்கு அதனைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என யாழ்.மாவட்ட மோட்டார் திணைக்கள உதவி ஆணையாளர் வ.பத்மநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

வவுனியா மாவட்டச் செயலகத்தில் யாழ். மாவட்ட முகவரி கொடுத்துப் பதிவு செய்யப்பட்ட மோட்டார் வாகனங்களுக்கான இலக்கங்கள் உரிய வர்களுக்கு இதுவரை கிடைக்கவில்லை என்று பலரும் முறையிட்டுள்ளனர். அவ்வாறு கிடைக்காதவர்கள் யாழ்.மாவட்ட மோட்டார் திணைக்களத்தினூடாக இலக்கப் பதிவைப் பெற்றுக் கொள்ளலாம்.

மோட்டார் வாகன இலக்கங்களைப் பெற விரும்புவோர் மோட்டார் வாகன அடையாள அட்டை, பதிவுச் சான்றிதழ் என்பவற்றுடன் நேரடியாக அல்லது எழுத்து மூலம் யாழ். மாவட்ட மோட்டார் திணைக்களத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம் - என அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-204-202)

## கடைகளில் திருட்டு

கொக்குவில் சந்தியில் உள்ள இரண்டு கடைகளில் பெறுமதி மிக்க பொருள்கள் திருட்டுப் போயுள்ளன. கொக்குவில் சந்தியில் உள்ள இவ்விரு கடைகளின் முன் கதவுகளை உடைத்து உட்புகுந்த வர்களே பொருள்களை அபகரித்துச் சென்றுள்ளனர்.

ஒரு கடையில் இருந்து சுமார் மூன்று லட்சத்து இருபத்தையாயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட பல்வேறு பொருள்களும் மற்றைய கடையில் இருந்து 90ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட பொருள்களும் திருடப்பட்டுள்ளன. (ஒ-86)

## கலைஞர் விவரம் திரட்டும் பணி

யாழ்.மாவட்டக் கலை, கலாசாரப் பேரவையினரால் கலைஞர்கள் விவரத்திரட்டு வெளியிடப்படவுள்ளது. இதற்கென தென்மராட்சிப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கலைஞர்கள் தென்மராட்சி பிரதேச கலாசார உத்தியோகத்தரிடம் படிவத்தைப் பெற்று விவரங்களைப் பூரணப்படுத்தி எதிர் வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.(ஒ-190)

## கல்விக் கொடுப்பனவு

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலகப் பிரிவில் 20 வறிய மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கு சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் அனுசரணையுடன் கல்வி மேம்பாட்டுக் கொடுப்பனவாக தலா 500 ரூபா மாதாந்தம் வழங்கப்பட்டு வருகின்றது. வடக்கு-கிழக்கு மாகாண சிறுவர் நன்நடத்தைப் பராமரிப்பு சேவை திணைக்களத்தின் ஊடாக அண்மையில் இரு மாதங்களுக்கான கொடுப்பனவு இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-135)

# மரண அறிவித்தல்கள்

## வயித்திலிங்கம் பாலசுப்பிரமணியம்

(ஓய்வுபெற்ற செயலாளர், வலி.தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்)



சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும், அராலி மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட வயித்திலிங்கம் பாலசுப்பிரமணியம் அவர்கள் 05.02.2006 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வயித்திலிங்கம் - சரஸ்வதி தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பாலசுந்தரம் - சிவபாக்கியம் தம்பதியினரின் மூத்த மருமகனும் இந்துராணி (பேபி) யின் பாசமிகு கணவரும் ரூபராணி (லண்டன்), குமாரலிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் கோணேஸ்வரன் (மோகன் - லண்டன்), மலைமகள் (சுஜா - ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரசாந்தி, கௌதமி (லண்டன்), ஆகியோரின் அன்புப் பேரனாரும் இராசபூபதி, துரைராஜா ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற இரத்தினகுமார், செல்வராணி, அருளானந்தம் (ஜேர்மனி), சரஸ்வதியம்மா, சந்திரா (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற திசைவீரசிங்கத்தின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.02.2006) புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அராலியில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக அராலி தெற்கு பூனாடை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அராலி மத்தி,
வட்டுக்கோட்டை

தகவல்:
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(சி-46539)(21.19.16)

## சவிரிமுத்து ஸ்ரனிஸ்லோஸ் (B.A., Dip.in.Ed.)

(முன்னாள் இளைப்பாறிய ஆசிரியர், உடுவில் மகளிர் கல்லூரி)

நவாலி தெற்கைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட சவிரிமுத்து ஸ்ரனிஸ்லோஸ் அவர்கள் 03.02.2006 வெள்ளிக்கிழமை லண்டனில் காலமானார்.

(உடுவில் மகளிர் கல்லூரி முன்னாள் இளைப்பாறிய ஆசிரியரும், யாழ்.பிராந்திய சீநோர் அபிவிருத்தி நிறுவனத்தின் பொது முகாமையாளரும், இயக்குநர் சபை தலைவரும், வட மாகாண கடற்றொழில் சங்கத் தலைவரும் Late chairman of south London welfair society)

அன்னார் காலஞ்சென்ற லலிதா புவனராணியின் அன்புக் கணவரும், அந்தோனிப்பிள்ளை (ஏரியார், கச்சேரி - மன்னார்) திருமதி யோசவ் பெர்னாண்டோ (அருந்ததி), திருமதி அந்தோனிப்பிள்ளை புஸ்பராணி (சின்ரி), ஆகியோரின் அன்புச் சகோதரனும் லண்டனில் வசிக்கும் மனோ, சிங்கிளி, சுரேஸ்குமார், கிருஷாந்தி, பிறேம்குமார், துஷி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 11.02.2006 சனிக்கிழமை, லண்டனில் உள்ள விம்பிள்டன் கிறிமிரோறியத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

நவாலி தெற்கு,
மானிப்பாய்.

தகவல்:
**பி.சிலுவைராசா**
(சகோதரன்).

(46544)(21.19.16)

## திருமதி தங்கமுத்து இராசநாயகம்

"கமலஸ்தான்" மின்சாரநிலைய வீதி, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், திருச்சி ஸ்ரீ பிரேமானந்தா ஆசிரமத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி தங்கமுத்து இராசநாயகம் அவர்கள் 06.02.2006 திங்கட்கிழமை சிவபதம் எய்தினார்.

அன்னார் அமரர் இராசநாயகம் (தொழிலதிபர் அநுராதபுரம்) அவர்களின் அன்பு மனைவியும் இ.கமலநாதன் (பொறியியலாளர் - இந்தியா) அவர்களின் பாசமிகு தாயாரும் Dr. க.சந்திராதேவி (இந்தியா), Dr. அ.பிறைசூடி (அமெரிக்கா), Dr. செல்வராணி ஆகியோரின் அன்பு மாமியும், செல்வி சிவதி கமலநாதன் (ஸ்ரீ பிரேமானந்தா ஆசிரம அறக்கட்டளை - இந்தியா), Dr.பி.சங்கமன் (அமெரிக்கா), செல்வன் பி.சேயோன் (அமெரிக்கா) ஆகியோரின் பாட்டியும் சுன்னாகத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான அப்புத்துரை (மாஸ்ரர்), இராசரட்ணம் (லிகிதர்), கனகரட்ணம் (களஞ்சியப் பொறுப்பாளர்) சரஸ்வதி, பரமேஸ்வரி மற்றும் மகாலட்சுமி (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற நவரட்ணம், செல்வநாச்சியார் (பருத்தித்துறை) மற்றும் செல்வநாயகி (கனடா), திருமதி கமலம் துரைராசா (லண்டன்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தமிழ்நாடு, திருச்சி, ஸ்ரீ பிரேமானந்தா ஆசிரமத்தில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு தயவுடன் வேண்டிக்கொள்பவர்

***இ.கமலநாதன்** (மகன்), பொறியியலாளர், ஸ்ரீ பிரேமானந்தா ஆசிரமம், பிரேமானந்தா நகர், பார்த்திமா நகர், திருச்சி 620001, தமிழ்நாடு, இந்தியா*

தகவல்:
**திருமதி பாக்கியலட்சுமி நடராசா**
பூபாலகிருஷ்ண ஆசிரமம்,
சுன்னாகம்.

(46541)(21.19.16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சித் தேர்தல்களில் சு.க., ஜே.வி.பி. தனித்தனியாக!

## கூட்டமைக்கும் முயற்சி தோற்றதனால் ஐ.தே.கவுக்கு வெற்றி வாய்ப்பு பிரகாசம்

கொழும்பு, பெப். 8

**கடந்த பொதுத் தேர்தலிலும் அதன் பின்னர் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலிலும் ஓரணியில் நின்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், ஜே.வி.பியும் மிகவிரைவில் நடக்கவிருக்கின்ற உள்ளூராட்சித் தேர்தலில் தனித் தனி வழியில் செல்லத் தீர்மானித்துவிட்டன.**

**அவற்றுக்கிடையேயான கூட்டமைப்பு முறிந்ததால், பலமான எதிரணி இல்லாத நிலையில் தென்னிலங்கையில் ஐக்கிய தேசியக் கட்சியின் வெற்றிவாய்ப்பு இந்த உள்ளூராட்சித் தேர்தலில் பிரகாசமாகியிருப்பதாகக் கூறப்படுகின்றது.**

கடந்த காலங்களில் இடம்பெற்ற தேர்தல்களைப் போன்றே எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலிலும் ஜே.வி.பி., ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து போட்டியிடுமென்று முன்னர் பரவலாக எதிர்பார்க்கப்பட்டது.

தேர்தல் தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முக்கியஸ்தர்களான ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பல அமைச்சர்களுடன் ஜே.வி.பியினர் பல சுற்றுப் பேச்சுகளையும் நடத்தியிருந்தனர்.

17 உள்ளூராட்சி சபைகளில் தமது (ஜே.வி.பி.) சின்னத்தில் தேர்தலில் போட்டியிடுதல், வெற்றியடையும் உள்ளூராட்சி சபைகளில் மூன்றில் ஒரு பகுதி உறுப்பினர் பதவிகளைத் தமக்கு வழங்குதல் என்றவாறான பல விடயங்களை கூட்டமைப்புக்கான நிபந்தனைகளாக ஜே.வி.பி., ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு விதித்திருந்ததாகக் கூறப்படுகின்றது. ஆனாலும், ஜே.வி.பியின் இந்த நிபந்தனைகளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் உடனடியாக ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவியான முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா, கட்சியை எதிர்வரும் தேர்தலுக்காக தயார்படுத்திவருகிறார். ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்ந்து போட்டியிட விரும்பாத கட்சித் தலைவியிடம், ஜே.வி.பியின் இந்த நிபந்தனைகளை முன்வைக்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தயக்கம் காட்டி வருகிறார் எனக் கூறப்படுகிறது.

இந்தப் பின்னணியில் எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், ஜே.வி.பி யும் தனித்தனியே போட்டியிடும் நிலை உருவாகியிருக்கிறது.

இதேவேளை, இந்த நிலைமை ஐக்கிய தேசியக் கட்சிக்கு வெற்றிவாய்ப்பை நிச்சயமாகத் தந்துவிடுமென்று உறுதியாக நம்பப்படுகிறது. சிறுபான்மை இனங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ், முஸ்லிம் கட்சிகள் பல எதிர்வரும் தேர்தலில் ஐ.தே.கவுடன் கைகோக்கவுள்ளமை இந்த வெற்றியை உறுதிப்படுத்துமென்று அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகின்றது. (க)

# இஸ்லாமைச் சிறுமைப்படுத்தி கேலிச்சித்திரம் பிரசுரிப்பதா?

## இலங்கையிலும் ஆர்ப்பாட்டத்திற்கு முஸ்தீபு

உருவம் கொடுத்து கேலிச்சித்திரம் (கார்ட்டூன்) வரைந்து வெளியிட்ட டென்மார்க் நாளிதழுக்கும், அதை பிரசுரம் செய்த ஐரோப்பியப் பத்திரிகைக்கும் எதிராக ஆர்பாட்டமொன்றினை கொழும்பில் நடத்துவதற்கு சில முஸ்லிம் கட்சிகள் மற்றும் அமைப்புகள் ஆயத்தமாகிவருகின்றன எனத் தெரியவருகின்றது.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை இவ்வாறான ஓர் ஆர்ப்பாட்டம் நடைபெறக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

டென்மார்க் தூதரகம் இலங்கையில் இல்லை எனினும் அதன் கவுன்சிலர் அலுவலகம் ஒன்று உலக வர்த்தக மையத்தில் இயங்கி வருகின்றது. உலக வர்த்தக மையப் பிரதேசம் ஜனாதிபதி மாளிகைக்கு அருகில் உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ளது. எனினும், அங்கு சென்று தமது எதிர்ப்பை வெளிப்படுத்த இந்த அமைப்புகள் தயாராகி வருகின்றன எனக் கூறப்படுகின்றது.

அதேவேளை, ஈரானின் அணுக்கொள்கைத் திட்டத்தை ஐ.நா. பாதுகாப்புச்சபைக்குக் கொண்டுவரும் அமெரிக்க ஆதரவுப் பிரேரணைக்கு அணுஆயுதக் கண்காணிப்புக்குழுவின் கூட்டத்தில் இலங்கையும் ஆதரவு வழங்கியமையை எதிர்த்து சில முஸ்லிம் கட்சிகள் எதிர்ப்பு ஆர்பாட்டங்களில் ஈடுபடவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. (க)

# சுதந்திர தின நிகழ்ச்சியை ரணில் பகிஷ்கரித்தமை குறித்து அதிருப்தி

கொழும்பு,பெப்.8

கடந்த சனிக்கிழமை கொழும்பில் இடம்பெற்ற தேசிய சுதரந்திர தின வைபவத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், எதிர்க் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க கலந்து கொள்ளாமை குறித்து ஐ.தே.கவின் மூத்த உறுப்பினர்கள் பலர் கடும் அதிருப்தி வெளியிட்டிருக்கின்றனர் எனத் தெரியவருகிறது.

ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற அனைத்து சுதந்திர தின தேசிய விழாக்களிலும் கலந்து கொண்டிருந்தாரென்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு எதிரான அணியிலுள்ள முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, அவரின் சகோதரரும் தற்போதைய அமைச்சருமான அனுர பண்டாரநாயக்க ஆகியோர் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற தேசிய சுதந்திரதின வைபவத்தை பகிஷ்கரித்திருந்தனர்.

இதேபோல் ஐ.தே.க. தலைவர் இந்த நிகழ்வில் கலந்து கொள்ளாததன் மூலம் அவரும் ஜனாதிபதிக்கு எதிரான அந்த அணியில் இருப்பவர் என்றே கருத வேண்டியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த பிரமுகர்கள் பலர் விசனம் தெரிவித்திருக்கின்றனர்.

எதிர்வரும் நாள்களில் நடைபெறவுள்ள கட்சியின் கூட்டங்களின்போது இது விடயத்தை சுட்டிக்காட்டுவதற்கு மேற்படி பிரமுகர்கள் தீர்மானித்திருக்கின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (க)

## டென்மார்க் பொருள்களை பகிஷ்கரிக்க கோருகிறார் அஸ்வர்

கொழும்பு,பெப்.8

டென்மார்க்கிலிருந்து இறக்குமதியாகும் தின் பண்டங்களையும், ஏனைய பாவனைப் பொருள்களையும் கொள்வனவு செய்யாமல் பகிஷ்கரிப்பதன் மூலம், இலங்கை வாழ் முஸ்லிம்கள், நபிகள் நாயகத்தின் கேலிச் சித்திரங்களின் பிரகாரம் காரணமாக தமக்கு ஏற்பட்டுள்ள மனவேதனைகளையும், ஆதங்கங்களையும் குறிப்பிட்ட டானிஷ் பத்திரிகைகளுக்கும் அதனைக் கண்டு பாராமுகமாக இருந்த டானிஷ் அரசுக்குழு உணர்த்துவது சாலப் பொருத்தமான திட நம்பிக்கையாக இருக்கும் என்று ஐ.தே.க. வின் மூத்த உறுப்பினரும் முன்னாள் இஸ்லாமிக்குரிய கலாசார விவகார அமைச்சருமான ஏ.எச்.எம். அஸ்வர் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்தார்.

இதேவேளை,இஸ்லாமிய மதத்தை அவமதித்த இந்த செயல் குறித்து இலங்கை அரசும் த்னது ஆட்சேபனையையும், கண்டனத்தையும் டானிய அரசாங்கத்துக்கு இலங்கை மக்கள் சார்பில் தெரிவித்து கொள்ள வேண்டும் என்றும் கோரியிருக்கின்றார். கருத்துச் சுதந்திரம் என்ற பேரில் மத உணர்வுகள் அவமதிக்கப்படுவதை நாகரிக உலகம் சகித்துக் கொண்டிருக்காது என்றும் அஸ்வர் தமது அறிக்கையில் சுட்டிக் காட்டியிருக்கின்றார். (க)

# ஈழத்தமிழர் துயர் களைய உதவுங்கள் கருணாநிதிக்கு ம.ம.மு. தலைவர் கடிதம்

''மலையகம் மற்றும் வடக்கு - கிழக்கு வாழ் தமிழர்களுக்கு எதிராக இலங்கை இராணுவப் படையினர் மேற்கொண்டுவரும் அடாவடித்தனங்களை இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங், இந்திய காங்கிரஸ் தலைவி சோனியாகாந்தி ஆகிய இருவரையும் நேரடியாகச் சந்தித்து எடுத்துரைத்து தமிழருக்கு விடிவைத்தேடித் தாருங்கள்''.

-இவ்வாறு மலையக மக்கள் முன்னணியின் தலைவர் ப.சந்திரசேகரன், தமிழ்நாடு தி.மு.க. தலைவர் கலைஞர் மு.கருணாநிதிக்கு கடிதம் எழுதியிருக்கிறார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

''இலங்கைத் தமிழர்கள் குறிப்பாக, மலையகம் மற்றும் வடக்கு - கிழக்கு தமிழர்கள் மீது இராணுவத்தினர் புரியும் கெடுபிடிகளை நான் உங்கள் கவனத்துக்கு நேரில் கொண்டுவந்தபொழுது மிகவும் அனுதாபப்பட்டீர்கள்.

இந்த மனித உரிமைமீறல் செயல்களை இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி ஆகியோரின் நேரடி கவனத்துக்கு கொண்டுவந்து ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுப்பதாக என்னிடம் தெரிவித்தீர்கள்.

தற்போதைய இலங்கையின் நிலையில் இராணுவத்தினரின் தொல்லைகள் அதிகரிக்கிறதே தவிர குறையவில்லை. சமாதானப் பேச்சுகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான சந்தர்ப்பம் வந்துள்ள போதிலும், இதன்மூலம் ஈழத் தமிழர்கள் படும் இன்னல்களுக்குத் தீர்வு உடனடியாகக் கிடைக்கும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை.

கடந்த 30ஆம் திகதி தமிழர் புனர்வாழ்வுக்கழக பணியாளர்கள் ஒரு பெண் உட்பட ஐந்து பேர் மட்டக்களப்பிலிருந்து வவுனியாவிற்கு வாகனத்தில் சென்றுகொண்டிருந்த போது இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டுள்ளனர். இதன் பின்னர் இன்னுமொரு இடத்தில் அதே கழகத்தைச் சேர்ந்த 5 பணியாளர்கள் கடத்தப்பட்டிருக்கிறார்கள்.

மனித உரிமைகள் விஷயங்களில் சர்வதேச சமூகத்தின் அணுகுமுறைகள், ஒவ்வொரு நாட்டினதும் வெளிநாட்டுக் கொள்கையை அனுசரித்தே அமைகிறது. ஆனால், உலகத் தமிழர்களின் தலைவர் நீங்கள் என்ற வகையில் ஈழத் தமிழர்களின் துயரங்களைத் துடைப்பதற்கான சுமை, உங்கள் தோள்களிலேயே வந்து விழுந்துள்ளது. இது வரலாற்றுக்கடமையாகும் இதனைத் தீர்க்க வழி சமையுங்கள்'' - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)



யாழ்.செயலகத்துக்கு அருகே உள்ள வர்த்தக நிலையம் ஒன்று நேற்றுக்காலை திடீரெனத் தீப்பிடித்து எரிந்து அழிந்தது. எரிந்து அழிந்த அந்தக் கடையையும் யாழ்.மாநகர தீயணைப்பு பிரிவினர் தீயை அணைக்க முயன்ற காட்சிகளையும் படங்களில் காணலாம்.

(ஜ )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த ஆண்டு மட்டும் 2 ஆயிரத்து 460 பதியப்படாத பிறப்புகள் பதிவு

யாழ்ப்பாணம், பெப்.8

வடக்கு-கிழக்கில் கடந்த ஆண்டில் 2 ஆயிரத்து 460 பதியப்படாத பிறப்புப் பதிவுகள் செய்யப்பட்டுள்ளன என்று வடக்கு-கிழக்கு மாகாண மேலதிக பதிவாளர் நாயகம் ந.சதாசிவஐயர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:-

பெரும்பாலானோர் கவனயீனம் காரணமாகத் தமது பிறப்புப்பதிவுகளை உரிய காலத்தில் மேற்கொள்ளத்தவறிவிடுகின்றனர்.

இவ்வாறு தவற விடப்பட்ட பதிவுகளை மேற்கொள்வதற்காகவும் பதிவுகள் மேற்கொள்ளாமையால் மக்கள் அடையும் அசௌகரியங்களைத் தீர்ப்பதற்குமென கடந்த வருடம் நடமாடும் சேவைகள் நடத்தப் பட்டன. இதன் போது பெரும்பாலானோர் காலம் பிந்திய பதிவுகளை மேற்கொண்டனர்.

இவ்வாறு நடத்தப்பட்ட நடமாடும் சேவைகள் மற்றும் ஏனைய சந்தர்ப்பங்களின் போதே இந்தப்பதிவுகள் மேற்கொள்ளப் பட்டன.

அத்துடன், பதியப்படாத 771 இறப்புகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(எ-203- 202)

# பகுதி நேர ஆங்கில ஆசிரியரின் நிரந்தர நியமனம் குறித்து கல்விச் செயலருடன் சந்திப்பு

அச்சுவேலி பெப்.8

பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கு மாகாணக் கல்வி அமைச்சு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனஇலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தூதுக்குழு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரை நேரடியாகச் சந்தித்துக் கோரியுள்ளது.

சங்கத்தின் பொதுச்செயலாளர் த. மகாசிவம் தலைவர் என். இராசநாதன் ஆகி யோர் உள்ளடங்கிய தூதுக்குழு கல்விச் செயலாளரை அண்மையில் நேரடியாகச் சந்தித்தது.

சங்கத்தின் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட கல்வி அமைச்சின் செயலா ளர் இ. தியாகலிங்கம் நியமனம் வழங் குவது தொடர்பான செயற்பாட்டைப் பூரணப்படுத்துவதற்கு வலயக்கல்வி பணிப்பாளர்களால் அனுப்பி வைக்கப்படும் விவரப்பட்டியல்கள் சில வலயங்களிலிருந்து இது வரை கிடைக்கவில்லை என்றும்-

பட்டியல்கள் கிடைத்ததும் கல்வியமைச்சிடம் அனுமதி பெறப்பட்டு நியமனம் வழங்கப்படும் என்றும்- தெரிவித்தார் என்று தமிழர் ஆசிரியர் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

(எ 11)

## இளவாலை - போயிட்டி புனித லூர்து அன்னை ஆலய வருடாந்த உற்சவம் 11.02.2006

இளவாலை - போயிட்டி புனித லூர்து அன்னை ஆலய உற்சவம் யாழ்.அதி வணக்கத்திற்குரிய ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் இடம்பெறும். அன்னையின் அருள்பெற்று அமைதியில் வாழ அழைத்து நிற்கின்றோம்.

*நற்கருணை வழிபாடு 10-02-2006 பிற்பகல் 5.30 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகும்.*

*திருவிழாத் திருப்பலி 11-02-2006 காலை 6.30 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகும்.*

போயிட்டி, இளவாலை. (46474) பங்குத்தந்தை, பங்குமக்கள்.

# மாவிட்டபுரத்தில் தைப்பூச விழா

யாழ்ப்பாணம் பெப்.8

மாவிட்டபுரம் கந்தசாமி ஆலயத்தில் தைப்பூச விழா எதிர்வரும் 11 ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

காலை 8.30 மணிக்கு ஸ்நபனாபிசேக ஆரம்பமும், 9.30 மணிக்கு காலைச்சந்திப் பூசையும், 9.45 மணிக்கு புதிரெடுத்தல், புதிர் பூசை ஆகியனவும் இடம்பெற்று 10.45 மணிக்கு சண்முகப் பெருமான் வீதியுலா வருவார்.

தொடர்ந்து நண்பகல் 12 மணிக்கு உச்சிக்காலப் பூசை இடம்பெற்று மகேஸ்வர பூசை இடம்பெறும்.

(203)

## 7ஆம் ஆண்டு நெஞ்சகலா நினைவலைகள்



தவப்பேறு 31.03.1969 சிவப்பேறு 08.02.1999

அமரர் கிருஷ்ணபிள்ளை ராஜ்குமார் (B.A.F.)

(உப அதிபர்- வவு/ வீரபுரம் மணிவாசகர் வித்தியாலயம்)

ஆண்டுகள் ஏழு ஆனாலும் ஆறிடுமோ எம்மனது?

ஆத்ம சாந்திக்காக இறைஞ்சும்:

கரவெட்டி மேற்கு T.P.:060-2213076

குடும்பத்தினர். (C/47741)

## சிவமயம் திருமண வாழ்த்து

திருநிறை செல்வன் கணேசமூர்த்தி ஸ்ரீவிக்கினேஸ்வரன் [அவுஸ்திரேலியா]

திருநிறை செல்வி பாலசுப்பிரமணியம் யசோதரை [டாக்டர், முல்லைத்தீவு] [கல்வயல்]

"ஐங்கரத்தண்ணல் அவர் பெற்றெடுத்த முத்து"
"கோல்மயில் வாகனனார் மகிழும் மலர் கொத்து"
"ஸ்ரீ வெங்கடேசர் திருப்பதியில் கைப்பிடிக்கும் வேளை"
"வாழ்த்துகின்றோம் நலமுடனே வளங்கள் என்றும் கொழிக்க"

கல்வயல், சாவகச்சேரி. (46483) விநாசித்தம்பி வேலுப்பிள்ளையும் மனைவி அருட்சோதியும்

# உலக உணவுத்திட்டத்தின் வேலைகள் சாவகச்சேரியில்

தென்மராட்சி கிழக்கு, பெப்.8

2006ஆம் ஆண்டில் உலக உணவுத் திட்டத்தின் கீழ் சாவகச்சேரி பிரதேச சபையின் எல்லைப் பிரிவினுள் வேலைத்திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படவுள்ளன.

இது சார்பாக சனசமூக நிலையப் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் எதிர்வரும் 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு சாவகச்சேரி பிரதேச சபை தலைமைப் பணிமனையில் இடம் பெறவுள்ளது.

இக்கலந்துரையாடலுக்கு சனசமூக நிலையங்களின் தலைவர், செயலாளர் ஆகியோர் கலந்துகொண்டு தங்களின் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய வேலைத் திட்டக் கோரிக்கைகளை சமர்ப்பிக்குமாறு சாவகச்சேரி பிரதேச சபை செயலாளர் கு.ந. பாலச்சந்திரன் கடித மூலம் கேட்டுள்ளார்.

(203-122)

IT@ TECHNOMA
COMPUTER INSTITUTE
No : 15 Station Road Kokuvil
மாணவர்களே இவ்வரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்
உங்கள் IT@TECHNOMAவில் புதிய கற்கை நெறிகள் (10-02-2006)அன்று மாலை திறமையான ஆசிரியர் குழாமுடன் உதயமாகின்றது.
ஒவ்வொரு மாணவர்களுக்கும் எங்குமில்லாத தனிப்பட்ட கவனிப்புக்களும் போதியளவு கணினிப்பயிற்சிகளும் வழங்கப்படுகின்றது. உங்களுக்கான கற்கை நெறிகள்:
MS Office, GIT, DTP, Hard Ware, Kids.
இவற்றுடன் சிறியவர் முதல் பெரியவர் வரையிலான
General English ,Gama Abacus மற்றும் சிங்களம்.
(உங்கள் வசதிக்கேற்ப நேரசூசி வழங்கப்படும்.)
அவற்றுடன் கணினிப்பாவனையாளர்கள் கணினி சார்தொடர்புடையவர்களுக்கான அனைத்து சேவைகளும் வழங்கப்படும்.
T.P:-021-4591989. E-Mail:it.technoma@gmail.com Mobile:-077-6286552.
WE TEACH YOU THE BEST

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

அன்னை மடியில் 12 . 02 . 1905



ஆண்டவன் அடியில் 10 . 01 . 2006

### அமரர் பூதப்பர் சண்முகம்

*பாசம் நிறைந்த இருதயமே*
*பண்பு நிறைந்த பெட்டகமே*
*பட்டறிவு நிறைந்த பொக்கிசமே*
*பாரினில் நிறைந்த வாழ்வு 101 வருடமே*
*பிரிவுதனை எண்ணிப் பரிதவிக்கிறோமே!*

நாளை (09.02.2006) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.


முகாவில், இயக்கச்சி.

வெகு விரைவில்!... உங்களுக்காக யாழ் மண்ணில் புதியதோர் உதயம்...
MAK Cost Cutter Super market

மளிகைப்பொருட்கள், ஐஸ் கிறீம், இனிப்பு வகைகள்
பழப்பானங்கள், மதுபானங்கள், பழவகைகள்
இறைச்சி வகைகள், பாதணிகள், மருந்து வகைகள்
மின்னியல், இலத்திரனியல், பிளாஸ்ரிக்
அன்பளிப்பு பொருட்கள், வீட்டுப்பாவனைப்பொருட்களுடன்
யாழ் மண்ணில் உதயமாகின்றது...

உங்களுக்கு அன்றாடம் தேவையான பொருட்களை நியாயமான விலையில் ஒரே கூரையின் கீழ் புதிய மெருகுடன் தரமாக பெற்றுக்கொள்வதற்கு இதோ!....
புதியதோர் உதயம்.....
மெக் கோஸ்ட் கட்டர் சுப்பர் மாக்கெற்
இல: 484. ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 222 9777

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





மன்னார் மாவட்டப் பொருண்மிய மதியுரையகத்தின் அனுசரணையுடன் வெள்ளாங்குளம் பிரதேசத்தில் கணனி நிலையம் ஒன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. நிகழ்வில் பொதுச் சுடரை பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் குணராஸ் ஏற்றுவதை முதலாவது படத்திலும் நிலையக் கட்டடத்தை ஐ.எல்.ஓ.நிறுவனத்தின் மன்னார் மாவட்ட வெளிக்கள அலுவலர் நாடாவெட்டித் திறந்து வைப் பதை இரண்டாவது படத்திலும் கணனிகள் சம்பிரதாய பூர்வமாக இயக்கி வைக்கப்படுவதை அடுத்துள்ள படத்திலும் காணலாம். (படங்கள்: மு.கந்தசாமி)

## பேருந்து தரிப்பிடம் திறந்து வைப்பு

கிளிநொச்சி,பெப்.8

கிளிநொச்சி, உருத்திரபுரீஸ்வர பகுதியில் மோகனப்பிரியன் ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்ட பஸ் தரிப்பிடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது

தமிழர் புனர்வாழ்வுக் கழக அனுசரணையுடன் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினால் நடத்தப்பட்டுவரும் கானகன் முன்பள்ளியில் கல்விபயின்று சாவடைந்த செல்வன் இ.மோகனப்பிரியன் ஞாபகார்த்தமாக அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினரும், மோகனப்பிரியனின் பெற்றோரும் இணைந்து இதனை நிறுவியுள்ளனர்.

நிறுவன செயலாளர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தேசியக் கொடியேற்றல், மங்கள விளக்கேற்றல் ஆகிய நிகழ்வுகளைத் தொடர்ந்து தமிழர் புனர்வாழ்வுக் கழக மாவட்ட இணைப்பாளர் ராஜன் புதிய பேருந்து நிலையத்தை நாடாவெட்டித் திறந்து வைக்க, உருத்திரபுரம் வடக்கு கிராம அலுவலர் பெயர்ப் பலகையைத் திரைநீக்கம் செய்து வைத்தார்.

தொடர்ந்து மோகனப்பிரியனின் படத்திற்குப் பெற்றோர் மலர்மாலை அணிவித்து விளக்கேற்றி வணக்கம் செலுத்தினர்.

(த-301-203)

## முன்பள்ளி திறந்துவைப்பு

ஒட்டுசுட்டான்,பெப்.8

ஒட்டுசுட்டான் காஞ்சூரமோட்டைக் கிராமத்தில் முன்பள்ளி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் நிதியுதவியுடனும் முல்லைத்தீவு அகதிகள் புனர்வாழ்வுக் கழக அனுசரணையுடனும் அமைக்கப்பட்ட இந்த முன்பள்ளி கடந்த 31ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

ஆரம்பக்கல்வியைப் பெற நீண்ட தூரம் செல்லவேண்டி இருந்த இக்கிராம சிறார்களின் சிரமம் முன்பள்ளி ஆரம்பிக்கப்பட்டதால் குறைந்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

(த-341-204)

## ஒட்டுசுட்டான் கமநல நிலையத்துக்கு புதிய நிர்வாகக் குழு

ஒட்டுசுட்டான்,பெப்.8

ஒட்டுசுட்டான் கமநலசேவை நிலையத்திற்கு புதிய நிர்வாகக்குழு தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

கமநல சேவைகள் நிலையப் பெரும்பாக உத்தியோகத்தர் எஸ்.அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்தநிகழ்வில் 2006 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகக் குழுத் தலைவராக இ.வேதநாயகம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

(த-341)

# அளம்பில றோ.க.வித்தியாலயத்தில் புதிய கட்டடங்கள் திறந்துவைப்பு

புதுக்குடியிருப்பு,பெப்.8

அளம்பில் றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட இரண்டு கட்டடங்கள் அண்மையில் திறந்து வைக்கப்பட்டன.

இப்பாடசாலையில் பொதுக் கல்வித் திட்டம் II இன் கீழ் அமைக்கப்பட்ட நூலகக் கட்டடமும், புனர்வாழ்வு புனரமைப்பு புனர் நிர்மானத்திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட கட்டடமுமே திறந்து வைக்கப்பட்டன.

நிகழ்வில் மங்கள விளக்கினை அளம்பில் பங்குத்தந்தை யூட் அமலதாஸ், முல்லைத்தீவு வலயக் கல்வி பிரதிக் கல்விப் பணிப்பாளர் செ.சிவராசா ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தமிழீழத் தேசியக் கொடியினை அளம்பில் பிரதேச கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் அரவிந்தனும் வித்தியாலயக் கொடியினை கல்லூரி முதல்வர் இ.நேவிந் ஜீவராசாவும் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து நூலகக் கட்டடத்தினை அளம்பில் பங்குத் தந்தை நாடா வெட்டித் திறந்து வைத்தார். மற்றைய கட்டடத்தினை முல்லைத்தீவு வலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

குமுழமுனை பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் எஸ்.பருதி, அளம்பில் வடக்கு கிராம சேவையாளர் திருமதி விஜயரத்தினம் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர் எஸ்.ராஜா ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர்.

(த-6-353)

## புதூர் நாகதம்பிரான் ஆலய நிர்வாகக் குழு தெரிவு

கிளிநொச்சி,பெப்.8

புதூர் ஸ்ரீநாகதம்பிரான் ஆலய பரிபாலன சபையின் 2006 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாக சபைத் தெரிவு கடந்தமாதம் 29 ஆம் திகதி இடம்பெற்றது.

சபையின் புதிய தலைவராக ந.ஞானசுந்தரமும் செயலாளராக இ.பூலோகசிங்கமும் பொருளாளராக சி.கருணேஸ்வரனும் தெரிவு செய்யப்பட்டனர்.

ஏனைய 12 சபை உறுப்பினர்களும் போசகர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.(த-202)

# முல்லைத்தீவு மாவட்டத்தின் திணைக்களக் கூட்டங்கள் 16,17இல்

புதுக்குடியிருப்பு,பெப்.8

முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு திணைக்களங்களுக்குமான குழுக் கூட்டங்கள் எதிர்வரும் 16ஆம், 17ஆம் திகதிகளில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இத்தகவலை மாவட்ட அரச அதிபர் திருமதி மேரி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

எதிர்வரும் 16ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு மாவட்ட விவசாயக் குழுக் கூட்டமும், முற்பகல் 11.30 மணிக்கு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் கூட்டமும், பிற்பகல் ஒரு மணிக்கு உலக உணவுத் திட்ட மீளாய்வுக் குழுக் கூட்டமும், பிற்பகல் 2மணிக்கு ஆழிப்பேரலை வீடமைப்புத் திட்ட மீளாய்வு குழுக்கூட்டமும், பிற்பகல் 3.30 மணிக்கு மாவட்ட நீர்வழங்கல் வடிகாலமைப்பு ஒருங்கிணைப்புக் கூட்டமும் நடைபெறவுள்ளன.

17ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு அத்தியாவசிய சேவைகள் குழுக் கூட்டமும், முற்பகல் 11.30 மணிக்கு சுற்றாடல் பாதுகாப்புக் குழுக் கூட்டமும், நண்பகல் 12 மணிக்கு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்குழுக் கூட்டமும் நடைபெறும் என அரச அதிபர் மேலும் தெரிவித்துள்ளார்.

(த-353-202)

# அரச வங்கிகளில் வசதியீனம்; வாடிக்கையாளர்கள் சிரமம்!

கிளிநொச்சி,பெப்.8

கிளிநொச்சி நகரிலுள்ள அரச வங்கிகள் போதிய வளங்கள் இன்றி இயங்குகின்றன. இதனால் வாடிக்கையாளர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

கிளிநொச்சியில் இயங்கும் வங்கிகள் வாடகைக் கட்டடங்களிலேயே இயங்கிவருகின்றது. போதிய இடவசதி இன்றி வங்கிகளில் நெருக்கடிகள் ஏற்படுகின்றன.

வங்கிகளுக்கான காணிகள் ஒதுக்கப்பட்டுள்ளபோதும் கட்டடங்கள் அமைக்கப்படாததால் வாடகைக் கட்டடங்களிலேயே இயங்கி வருகின்றன.

மேலும் இங்குள்ள வங்கிகள் கணனி மயப்படுத்தப்படாமையால் வங்கி நடவடிக்கைகளிலும் தாமதம் ஏற்படுவதாக வாடிக்கையாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

(த-301-202)

# ஆலயத்துக்கு அருகில் குப்பை கூழங்கள்; அகற்றுமாறு மக்கள் வேண்டுகோள்

ஒட்டுசுட்டான்,பெப்.8

ஒட்டுசுட்டான், நெடுங்கேணி வீதியிலுள்ள சிவன் ஆலயத்திற்கு அருகிலுள்ள வீதிக்கருகில் குப்பை கூழங்கள் மற்றும் கழிவுகள் கொட்டப்படுவதால் பெரும் சுகாதாரக்கேடு நிலவி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.




இவ்வீதியில் கொட்டப்படும் கழிவுகளை காகம், நாய் என்பன கிணறுகளுக்குள்ளும் கோயில் சுற் றாடலிலும் போடு கின்றன.

இதனால், வீதியில் பயணம்செய்ய முடியாது துர்நாற்றம் வீசுவதோடு ஆலயத்தின் புனிதத் தன்மையும் கெடுக்கப்படுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். இவ்விடயம் தொடர்பாக ஒட்டுசுட்டான் பிரதேச சபை நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் வேண்டுகோள்விடுக்கப்பட்டுள்ளது. (த-341-204)

## கற்சிலைமடுச் சந்தியில் பஸ்தரிப்பு நிலையம்

ஒட்டுசுட்டான்,பெப்.8

ஒட்டுசுட்டான் புதுக்குடியிருப்பு வீதியில் உள்ள கற்சிலைமடு பிரதான சந்தியில் கற்சிலைமடுவைச் சேர்ந்த அமரர்கள் திரு. திருமதி சின்னையா தம்பதியரின் ஞாபகார்த்தமாக பஸ்தரிப்பிடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இதன் திறப்புவிழா கடந்த முதலாம் திகதி கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் தலைமையில் நடைபெற்றது.

பஸ் நிலையப் பெயர்ப்பலகையினை முன்னாள் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரும் பேராறு கிளை முகாமையாளருமாகிய அ.குமாரசாமி திரைநீக்கம் செய்துவைத்தார்.

பஸ் நிலையக் கட்டடத்தை ஒட்டுசுட்டான் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழரசன் நாடாவெட்டித் திறந்துவைத்தார்.

நினைவுரைகளை கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் நா.வன்னியசிங்கம் மற்றும் பலர் நிகழ்த்தினர். இப்பகுதியில் பஸ்தரிப்பிடம் இன்றி அல்லற்பட்ட மக்களின் சிரமம் தீர்ந்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

(த-341-204)

## கணனிப் பயிற்சிக்கு புதிய பயிற்றுநர்கள்

ஒட்டுசுட்டான்,பெப்.8

'ரி.ஆர்.ரெக்' நிறுவனத்தின் அனுசரணையுடன் முல்லைத்தீவுப் பொருண்மிய மதியுரையகத்தில் நடைபெற்றுவரும் கணனிப் பயிற்சி நெறிக்கு விரைவில் புதிய பயிற்சியாளர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

தற்போது நடைபெற்றுவரும் பயிற்சி நெறிகள் பூர்த்தியடைந்ததும் புதிய பிரிவுகள் ஆரம்பிக்கப்படுமென்று நிறுவன இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (த-341-203)




முல்லைத்தீவு குமுழமுனை மகாவித்தியாலயத்தின் பவள விழாவையொட்டி சிறுவர் பூங்கா ஒன்று திறந்து வைக்கப்பட்டது. பூங்காவை இரு மாணவர்கள் சம்பிரதாய பூர்வமாகத் திறந்துவைப்பதை முதலாவது படத்திலும் - நிகழ்வில் விருந்தினர்களாகக் கலந்துகொண்ட வலயக் கல்விப்பணிப்பாளர் ப.அரியரத்தினம், பிரதிக் கல்விப் பணிப்பாளர் செ.சிவராசா, வித்தியாலய அதிபர் சே.சோதிகாந்தன் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர், பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் ஆகியோருடன் மாணவர்கள் பூங்காவில் நிற்பதை இரண்டாவது படத்திலும் காணலாம். (படங்கள்: த.விக்கினேஸ்வரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'மஹிந்த சிந்தனை' திட்டத்தின் கீழ்:

# பிரதேச சபைப் பிரிவுகள் தோறும் வீதிகள் புனரமைப்புக்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம்,பெப்.8

மஹிந்த சிந்தனைப் பிரகாரம் யாழ். மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு பிரதேச சபைப் பிரிவிலும் 3 லட்சம் ரூபா செலவில் வீதிகள் மீள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இதற்கென முதற்கட்டமாக யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரால் 8 பிரதேச சபைகளின் வீதி விவரம் அங்கீகரிக்கப்பட்டு அரசாங்க அதிபரின் சிபார்சுக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அரசாங்க அதிபருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள வீதிகளினதும் சபைகளினதும் விவரம் வருமாறு:-

* ஆனை விழுந்தான் வீதி - பிரதேச சபை, நல்லூர்.
* மேலைப் புலோலி சிறுவர் பாடசாலை வீதி - பருத்தித்துறை பிரதேச சபை.
* இராசையா வீதி - பிரதேச சபை வேலணை.
* விசுவத்தனை வீதி - வலி.மேற்கு பிரதேசசபை.
* வல்லை முதலாம் வீதி - வலி.மேற்கு பிரதேச சபை.
* வண்ணப்புர வீதி - வலி.மேற்கு பிரதேச சபை.
* சரவணபவானந்த வீதி - வலி.கிழக்கு பிரதேச சபை.
* ஆயித்தாம்புலம் வீதி - ஊர்காவற்றுறை பிரதேச சபை.

இந்த வீதிகளின் புனரமைப்புக்கு ஒவ்வொரு பிரதேச சபையிடமிருந்தும் 3 லட்சம் ரூபாவுக்கான மதிப்பீடு பெறப்பட்டுள்ளது.

இதேவேளை-

'மஹிந்த சிந்தனை' பிரகாரம் தேச நிர்மானத்திற்கும் அபிவிருத்திக்குமான அமைச்சால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டால் மட்டுமே இந்தத் திட்டங்களை நிறைவேற்ற முடியும் 'மஹிந்த சிந்தனை' பிரகாரம் ஏற்கனவே பல திட்டங்கள், முன்மொழிவுகள் அரசாங்க திணைக்களத் திட்டமிடல் அதிகாரிகளால் முன்வைக்கப்பட்டபோதும் இதுவரை நிதி ஒதுக்கீடுகள் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-185)

## ஒரு வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்குப் பால்மா

யாழ்ப்பாணம்,பெப்.8

இலங்கை சமூர்த்தி அதிகார சபையால் ஒரு வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்கான போசாக்கு பால்மா முத்திரை வழங்கப்படவுள்ளது.

இதற்கு அமைய யாழ்.மாவட்டத்தில் உள்ள ஒரு வயதிற்கு உட்பட்ட குழந்தைகளின் விவரங்கள் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஊடாக திரட்டப்பட்டு வருகின்றன என்று சமுர்த்திமகா சங்கத்தின் முகாமையாளர் கீயூமன் தெரிவித்தார். (த-190)

## பொதுக் கூட்டங்கள்

யாழ்ப்பாணம்,பெப்.8

இருபாலை தென்கோவை கற்பக விநாயகர் ஆலயத் திருப்பணிச் சபையின் பொதுக் கூட்டம் அடுத்த மாதம் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆலய மண்டபத்தில் பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

பண்டித்தர் த.இராசரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் புதிய நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவும் இடம் பெறும். (ஐ-202)

* * *

யாழ்ப்பாணம்,பெப்.8

வண்ணை கோம்பையன் மணல் இந்து மயான பரிபாலன சபைப் பொதுக்கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு மயான மண்டபத்தில் நடை பெறவுள்ளது. கலாநிதி க.குணராசா தலைமையில் நடைபெறவுள்ள இக் கூட்டத்தில் புதிய நிர்வாகிகள் தெரிவும் இடம்பெறும்.(ஐ-202)

## மீள்பரீட்சை

யாழ்ப்பாணம்,பெப்.8

யாழ்.பல்கலைக் கழக பட்டப்பின் படிப்புகள் பீடத்தின் பட்டப்பின் குடித்தொகை அபிவிருத்திக் கற்கைநெறி 2004 - 2005 இற்கான மீள் பரீட்சை அடுத்த மாதம் நடைபெறவுள்ளது.

இந்தக் கற்கை நெறியைப் பூர்த்தி செய்யத் தவறியவர்களுக்கான இப்பரீட்சைக்கு சம்பந்தப்பட்ட மாணவர்கள் விண்ணப்பங்களை எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் பீடாதிபதி அலுவலகம், பட்டப்பின் படிப்புகள் பீடத்திற் சமர்ப்பிக்குமாறு பல் கலைக்கழகப் பதிவாளர் கேட்டுள்ளார். (ஐ- 202)

## பெரியவிளானில் சமூக அபிவிருத்தி மையம்

யாழ்ப்பாணம்,பெப்.8

யுனிசெவ் - சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் நிதிப் பங்களிப்புடன் பெரியவிளானில் சமூக அபிவிருத்தி மையம் (Social development Centre) SDC அமைக்கப்படவுள்ளது.

வலி.தென்மேற்குப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட சமூக அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கான மையமாக இந்தக் கட்டடத் தொகுதி பெரியவிளானில் பிரதான வீதியருகே அமைக்கப்படவுள்ளது.

இந்தக் கட்டடத் தொகுதி அமையவேண்டிய இடத்தினை வலி.தென்மேற்குப் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் பார்வையிட்டு உறுதிசெய்தார்.

விரைவில் கட்டடத் தொகுதி அமைப்பதற்கான நடவடிக்கையை யுனிசெவ் நிறுவனம் மேற்கொள்ளும்.

இதேவேளை - ஏனைய 8 பிரதேச செயலர் பிரிவுகளிலும் சமூக அபிவிருத்தி மையங்களுக்கான இடத் தெரிவுகள் இடம் பெற்று வருகின்றன. (த-185)

## மணவாளக் கோலவிழா

சுழிபுரம்,பெப்.8

சுழிபுரம் பத்திரகாளி அம்மன் ஆலயத்தின் மணவாளக்கோலவிழா இன்று புதன் கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெறவுள்ளது.

விசேட பூசைகளுடன் 108 சங்காபிஷேகமும் இடம்பெறவுள்ளது. தொடர்ந்து அம்பிகை வீதியுலா வரும் காட்சியும் இடம் பெறும். (த-13)


**வீடு வாடகைக்கு**

யாழ்ப்பாணம் நல்லூர் கோயில் வீதியில் ஆறு அறைகள், இரண்டு பெரிய ஹோல்கள், விசாலமான விறாந்தை, சமயல் அறை, பொருள்கள் வைக்கும் அறை, மலசலகூட அறைகள், கார் கராஜ் வாகனங்கள் தரிப்பிடக்கூடிய சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு. அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு ஏற்றது. தொடர்பு: T.P.: 0779226056 (46495)

**இதோ அறிமுகப்படுத்துகின்றோம்**

**சிதாரா வர்ம தைலம்**

உடைவு, முறிவு,வீக்கம், சுளுக்கு, இரத்தக்கட்டு, முழங்கால் மூட்டுவலி, குதிக்கால்வலி ஆகியவைகளுக்கு காலை, மாலை பூசி வரவும்

Reg. Number 10171 ARPR NO. 228

(வெளிப் பிரயோகத்திற்கு மட்டும்)

சந்தைப்படுத்துவோர்:

**சிவா நறுமணப்பூங்கா**

288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

T.Phone 222 2567

(c/47681) (21.11.15)

**மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைச்சங்கம் (வ-து)**

**பதவி வெற்றிடம் - அம்புலன்ஸ் சாரதி/பொது உதவியாளர்**

முழுநேர அம்புலன்ஸ் சாரதி/பொது உதவியாளர் பதவிக்கான விண்ணப்பம் கீழ்வரும் தகைமைகள் உடையவர்களிடம் இருந்து கோரப்படுகின்றது.

- 25 வயதுக்கு மேற்பட்டவர்கள்
- க.பொ.த. சாதாரண தர சித்தி
- அம்புலன்ஸ் சாரதி அனுமதிப்பத்திரமும் நீண்ட கால அனுபவமும் (Class - A)

விண்ணப்ப முடிவுதிகதி 15.02.2006

கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம் (வ-து)
மூளாய், சுழிபுரம்.

பணிப்பாளர் சபை.

(ß/47751)(21.11.15)


## TENDER NOTICE

**JAFFNA MUNICIPAL COUNCIL**

Price Quotations for the Installation of a new TCL AF-852 EPABX Telephone System in exchange of the existing Syntel 1030 Telephone system at the office of the Municipal Concil, Jaffna will be received by me until 2 pm on Tuesday, 15th February 2006.

The intended PABX system should catert he present need of four Direct Lines and 36 extensions and should be expandable up to 8 Direct Lines and 52 extensions. It should contain facilities such as Digital Operator Control, Voice Assisted Direct Inward System Access Personal Outgoing Message, Caller ID, Computer Data Port, External Paging, and Account code.

The system should also cover the Lightning Protector System. The Present system can be inspected at Municipal Commissioners Office, Nallur, Jaffna.

Quotations should include the addresses and telephone numbers of present customer base in the Jaffna peninsula and of the nearest service backup center. It should indicate cost of the new installation and price at which the existing system would be taken over.

Further information can be obtained from the Technical Officer, Municipal Council, Jaffna.

**Municipal Commissioner,
Municipal Office,
Jaffna**

03 rd February 2006 (c/47747)(21)

### நீங்காத நினைவில் ஓராண்டு நிறைவு



மலர்வு 25 - 11 - 1945

உதிர்வு 19 - 02 - 2005

**அமரர் கிட்டிணன் தியாகராஜா**

**திதி: 08.02.2006**

பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய்
குடும்பத்தின் ஒளிவிளக்காய்
எங்களை வழிநடத்திய
அன்புத் தெய்வமே!
இன்று
சிறகொடிந்த பறவைகள் போல்
சிதறிப் போய் நிற்கின்றோமே
துடுப்பில்லாத படகைப் போல்
கண்ணீர்க் கடலில் தத்தளிக்கின்றோமே
தேற்றப் பலர் இருந்தும்
தேடுகின்றோம் உங்களைத்தான்.

**கேணியடி,
இமையாணன் கிழக்கு.
உடுப்பிட்டி.**

உம் பிரிவால் துயருறும்:
**குடும்பத்தினர்.**

(46521)(21.11.15)

### மரண அறிவித்தல்

**வைத்திலிங்கம் நடராசா (செல்லையா)**



அல்லைப்பிட்டி முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் நடராசா அவர்கள் 06.02.2006 இல் காலமானார்

அன்னார் வைத்திலிங்கம் - செல்லம்மா தம்பதியரின் மகனும் அரியகுட்டி - செல்லாச்சி தம்பதியரின் மருமகனும் மனோன்மணியின் அன்புக் கணவரும் அமரர் ஞானசேகரம், அமரர் வள்ளியம்மை, அமரர் செல்லப் பெருமாள், அமரர் அபிராமிப்பிள்ளை ஆகியோரின் சகோதரரும் சிறி இராசகுலதேவன் (சுவிஸ்), அமரர் பத்மராஜதேவி , கருணாநிதி (சுவிஸ்), மகேந்திரன் (ஜேர்மனி), மல்லிகா (ஜேர்மனி), சூரிய கலா(லண்டன்), சவுந்தரராஜா(பெல்ஜியம்) ஆகியோரின் தந்தையும் அமரர் தவமலர் , குமுதினி (சுவிஸ்), தவஞ்ஞான ரட்னேஸ்வரி (ஜேர்மனி), ஜேயமூர்த்தி (ஜேர்மனி), ஜேபாலசிங்கம் (லண்டன்), சுபாஜினி (பெல்ஜியம்) ஆகியோரின் மாமனும் சதீஸ் (ஜேர்மனி), சுகன்ஜா, சாருஜா, சரண்ஜா (சுவிஸ்), சாருஜன் (சுவிஸ்), நாமிகா(ஜேர்மனி),மதுசா(ஜேர்மனி), கோடிகன் (ஜேர்மனி), நிவேதன் (ஜேர்மனி), விதுசா (ஜேர்மனி), ஜெயந்தன் (ஜேர்மனி),பார்த்தீபன் (லண்டன்), பிருந்தா (லண்டன்), சுஜீதன் (பெல்ஜியம்),சுஜீதா(பெல்ஜியம்) ஆகியோரின் பேரனும் அமரர் பாலசிங்கம்,அமரர் தியாகராஜா, நடராசா , அமரர் புவனேஸ்வரி, பரமேஸ்வரி, இராஜேஸ்வரி, அமரர் தவமலர், யோகேஸ்வரி, அமரர் விவேகானந்தம்,உதயகுமாரி, தில்லையம்பலம், இலெட்சுமி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

முதலாம் வட்டாரம்,
அல்லைப்பிட்டி.

(46526) (21.11.15)

தகவல்:
**கமல்தாசன்**
(பேறாமகன்).


**COMPUTER EXPRESS**
**Institute of Information Technology**
இல.15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.
021-222 8250,0777 222422

முதன்முறையாக தமிழ்மொழி விளக்கத்துடன் ஒருவாரகால முழுநே

**Diploma in Video Mixing**

உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களைப்பெற, சுயதொழில் ஆரம்பிப்பதற்கு மற்றும் தரம்வாய்ந்த சான்றிதழைப் பெற

*Course Contents*

- கணனி தொடர்பான அறிமுகம்
- இயக்க அமைப்பு (Windows XP)
- Internet & e-mail
- Adobe Photoshop
- Adobe Premiere
- Cool 3D Studio
- Pinnacle Studio
- VCD Cutter
- Extra practical

Free Study Pack & Photos CD

Course fee :- 3000/=

நன்மைகள்:-

- பாடநெறியின் இறுதியில் Video Editing தொடர்பான பூரண அறிவைப் பெற்றுக்கொள்வதற்கான உத்தரவாதம்.
- அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படுவதால் கணனி தொடர்பான முன்னறிவு அவசியமில்லை.
- தராதரமும் நீண்ட அனுபவமும் கொண்ட விரிவுரையாளர்களால் கற்பிக்கப்படுகின்றது.
- 100% செய்முறைப் பயிற்சிகளுடனான விரிவுரைகளிற்கு உத்தரவாதம்.

வகுப்புக்கள் ஆரம்பம்:- *13/02/2006 :- 08.30*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகமது நபியை இழிவுபடுத்தும் கேலிச்சித்திரம்: முஸ்லிம்கள் கொதிப்பு! பரவலாக வன்முறை!!

லண்டன்,பெப்.8

நபிகள் நாயகம்(சல்) அவர்களின் உருவப்படம் எனக் கூறப்படும் கேலிச் சித்திரம் ஒன்று டென்மார்க் பத்திரிகை ஒன்றில் வெளியானதைத் தொடர்ந்து உலகம் முழுவதிலும் இஸ்லாமியர்கள் கிளர்ந்தெழுந்து ஆர்ப்பாட்டங்களிலும் வன்செயல்களிலும் ஈடுபட்டு வருகிறார்கள்.




ஆப்கானிஸ்தானில் இடம்பெற்ற ஆர்ப்பாட்ட வன்முறைகளினால் இதுவரை ஐந்து பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்று செய்திகள் கிடைத்துள்ளன.

டென்மார்க் பத்திரிகை ஒன்றில் வெளியான கேலிச்சித்திரமொன்றைக் கண்டித்து இஸ்லாமியர்கள் பல்வேறு எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்திவந்த அதே வேளை, ஐரோப்பாவிலும் வேறு பல நாடுகளிலுள்ள பத்திரிகைகளும் அப்படத்தை மீள்பிரசுரம் செய்துள்ளன.

இதனால் இஸ்லாமிய நாடுகளிலும் ஏனைய இஸ்லாமியர் மத்தியிலும் ஆத்திர உணர்ச்சி அதிகரித்துள்ளது.

ஒரு கேலிச்சித்திரத்தில் முகம்மது நபி என்று சித்திரிக்கப்பட்ட முகம் குண்டு மாதிரியிலான தலைப்பாகை அணிந்திருப்பது போல் காட்டப்பட்டிருந்தது. கடந்த வாரம் இக்கேலிச் சித்திரங்களை மறுபிரசுரம் செய்த ஐரோப்பிய பத்திரிகைகள் ஜனநாயகத்தைப் பேணுவதாகக் கூறிக்கொண்டன.

**ஆப்கானிஸ்தானில்....**

ஆப்கானிஸ்தானில் உள்ள அமெரிக்க பக்ரம் விமான நிலையத்தின் மீது ஆர்ப்பாட்டக்காரர்கள் தாக்குதல் நடத்தியபோது பொலீஸார் சுட்டதில் இருவர் கொல்லப்பட்டனர். அமெரிக்காவுக்கும் கேலிச்சித்திர வெளியீட்டுக்கும் சம்பந்தம் ஏதுமில்லை.

சோமாலியாவில் ஆர்ப்பாட்டங்காரர்கள் பொலீஸாரைத் தாக்கியபோது அவர்கள் திருப்பித் தாக்கியதில் 16 வயதுச் சிறுவன் நெரிசலில் மிதிபட்டு உயிர் இழந்துள்ளான்.

**தெஹ்ரானில் தூதரகம் எரிப்பு**

ஈரானில் டெனிஸ் தூதரகம் மீது ஆர்ப்பாட்டக்காரர்கள் பெற்றோல் குண்டுகளை வீசியுள்ளார்கள். டென்மார்க்குடனான வர்த்தக உறவுகளை ஈரான் துண்டித்துக்கொண்டுவிட்டது. தெஹ்ரானிலுள்ள ஒஸ்ரியன் தூதரகத்தின் மீது தாக்கிய ஆர்ப்பாட்டக்காரர்கள் தூரகத்தின் சுவர் மீது ஏறி உள்ளே புக முயற்சித்த போது பொலீஸார் கண்ணீர் புகைக்குண்டுகளை வீசி துரத்தியடித்தனர்.

சிரியாவிலும் லெபனானிலுமுள்ள டெனிஸ் தூதரகங்களின் மீது இஸ்லாமிய ஆர்ப்பாட்டக்காரர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை டமாஸ்கஸிலுள்ள தனது தூதரகம் தீ வைத்துக் கொளுத்தப்பட்டமைக்கு நோர்வே சிரியாவிடம் இழப்பீடு கோரியுள்ளது.

துருக்கிய மற்றும் ஸ்பானிய பிரதமர்கள் சர்வதேச ஹெரோல்ட் ட்ரிபியூன் பத்திரிகையில் விடுத்துள்ள ஓர் அறிக்கையில் அமைதியைக் காப்பாற்றும்படி வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

**புதுடில்லியில் ஆர்ப்பாட்டம்**

இந்தியத் தலைநகர் புதுடில்லியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களை பொலீஸார் கண்ணீர் புகைக்குண்டுகளையும் தண்ணீர்க் குழாய்களையும் பயன்படுத்திக் கலைத்தனர்.

தாய்வானில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களின்போது 'இறைவனே பெரியவன்' என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் குரல் எழுப்பினர். பாங்ஹொக்கிலுள்ள டென்மார்க் தூதரகத்துக்கு முன்னால் அந்நாட்டு கொடியை கீழேபோட்டு மிதித்தனர்.

பலஸ்தீனத்தில் காஸாப் பகுதியில் ஐரோப்பிய ஒன்றிய அலுவலகத்தின் முன்னாலும் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

ஆப்கானிஸ்தானில் லாக்மான் மாகாணத்தில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் 'டென்மார்க் சாகட்டும்' என்று கோஷம் எழுப்பப்பட்டது.

**முன்னைய தகவல்கள்**

2005 செப்ரெம்பர் 30ஆம் திகதி டென்மார்க் பத்திரிகை நபிகள் நாயகம்(சல்) பற்றிய கேலிச் சித்திரத்தை வெளியிட்டது. ஒக்ரோபர் 20ஆம் திகதி முஸ்லிம் நாடுகளின் தூதர்கள் டென்மார்க் பிரதமரிடம் இதுபற்றி முறையிட் டார்கள். 2006 ஜனவரி 10ஆம் திகதி நோர்வே பத்திரிகைகள் கேலிச்சித்திரங்களை மீள்பிரசுரம் செய்தன. 26ஆம் திகதி சவூதி அரேபியா தனது தூதரை திருப்பியழைத்தது. 31ஆம் திகதி டென்மார்க் பத்திரிகை மன்னிப்புக் கோரியது. பெப்ரவரி முதலாம் திகதி பிரான்ஸ் ஜேர்மனி, இத்தாலி மற்றும் ஸ்பெயின் நாட்டு பத்திரிகைகள் கேலிச் சித்திரங்களை மீள் பிரசுரம் செய்தன.

(ப)

> கேலிச்சித்திரத்தில் தாடி மற்றும் மீசையுடனான முகம் ஒன்று வெடிகுண்டு மாதிரியிலான தலைப்பாகை அணிந்திருப் பதுபோல் காட்டப்பட்டிருந்தது. அந்தத் தலைப்பாகையில் இஸ்லாமியர்களின் வணக்கத்திற்குரிய இலட்சினை பொறிக்கப்பட்டிருந்தது.
>
> இந்த முகத்தை இறை தூதர் நபி அவர்களின் முகம் என டென்மார்க் பத்திரிகை சித்திரித்திருந்தது.
>
> அந்தக் கேலிச் சித்திரம் கிடைத்தும் இஸ்லாமிய சகோதரர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து அதனை பிரசுரிப்பதைத் தவிர்த்துள்ளோம்.

உலக அரங்கில்




ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருக்கும் முஸ்லிம்கள் டென்மார்க் தேசியக் கொடியைத் தீக்கிரையாக்குகின்றனர்...

## 2ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்திய கிராமம்

பெய்ஜிங்,பெப்.8

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய கிராமம் சீனாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதை சீன தொல்லியல்துறை ஆராய்ச்சியாளர்கள் மத்திய சீனாவில் கண்டுபிடித்துள்ளனர்.

ஹீனான் மாகாணத்தில் நீஹங் கவுண்டியில் உள்ள இக்கிராமம் 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நிலச்சரிவிலோ வெள்ளத்திலோ பூமிக்கு அடியில் புதைந்திருக்கலாம் என்று தொல்லியல் அதிகாரிகள் தெரிவித்தனர்.

(ஐ)

## இந்தோனேஷியாவிலும் கண்டனப் பேரணிகள்

ஜகார்த்தா,பெப்.8

முகமது நபியை அவதூறாகச் சித்திரித்துக் கார்டூன் வெளியிட்டதாக கண்டனம் தெரிவித்து இந்தோனேஷியாவின் 4 நகரங்களில் முஸ்லிம்கள் கண்டனப் பேரணி நடத்தினர்.

வெடிகுண்டு போன்ற தலைப்பாக அணிந்த தோற்றத்திலும் இன்னும் பலவிதமா கவும் முகமது நபியை சித்திரித்து டென்மார்க் நாளிதழான 'ஜில்லன்ட்ஸ் -போஸ்டனில்' கடந்த செப்ரெம்பரில் கார்டூன்கள் வெளிவந்தன. பின்னர் ஐரோப்பிய பத்திரிகைகள் இவற்றை மறுபிரசுரம் செய்தன.

இதற்கு முஸ்லிம்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு எழுந்துள்ளது.

டென்மார்க் மன்னிப்பு கேட்கவேண்டும் என்று வலியுறுத்தி இந்தோனேஷியத் தலைநகர் ஜகார்த்தாவில் திங்கட்கிழமை டென்மார்க் தூதரகம் அமைந்துள்ள கட்டடத்துக்கு முஸ்லிம்கள் கண்டனப் பேரணி நடத்தினர்.

வேறு மூன்று நகரங்களிலும் கண்டனப் பேரணிகள் நடைபெற்றன.

(ஐ)

## காஷ்மீரில் ஹர்த்தால்

முகமது நபியை அவதூறாகச் சித்திரித்து ஐரோப்பிய பத்திரிகைகள் கார்டூன் பிரசுரித்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்து காஷ்மீரில் திங்கட்கிழமை ஹர்த்தல் அனுசரிக்கப்பட்டது.

இந்த ஹர்த்தாலுக்கு காஷ்மீர் பார் அசோஸியேஷன் மற்றும் தீவிரவாத இயக்கங்கள் அழைப்பு விடுத்திருந்தன. அரச ஊழியர் சங்கங்களின் கூட்டமைப்பு, காஷ்மீர் வர்த்தகர்கள் மற்றும் ஆலை உரிமையாளர்களும் ஆதரவு தெரிவித்திருந்தனர். (ஐ)

## வீதியோரக் கடைகளில் குரங்குப் பிரியாணி: 2 பேர் கைது!

பெங்களூர்,பெப்.8

பெங்களூரில் வீதியோர பிரியாணி கடைகளுக்கு விற்பனை செய்வதற்காக குரங்குகளை வேட்டையாடி வந்த 2 பேர் கைது செய்யப்பட்டனர்.

குரங்கு வேட்டையில் ஈடுபட்டனர் என்ற சந்தேகத்தில் பொலீஸாரால் இருவர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் பொலீஸார் விசாரணை நடத்தினர்.

வனப்பகுதியில் வேட்டையாடப்படும் குரங்குகளை அவர்கள் பன்னார்கட்டாப் பகுதியிலுள்ள தாபா எனப்படும் வீதியோர ஹோட்டல்களுக்கு விற்று வந்தமை தெரிய வந்தது. அந்த தாபாக்களில் குரங்குக் கறியைப் பிரியாணியாகசெய்து 'ஆட்டுக்கறி பிரியாணி' என்று ஏமாற்றி விற்பனை செய்து வந்துள்ளனர். (ஐ)

## உள்ளூரில் தயாரித்த வெடிகுண்டுகளாலேயே ஈராக்கில் அமெ.படைகளுக்கு அதிக சேதம்

வாஷிங்ரன்,பெப்.8

ஈராக்கில் உள்ளூரில் தயாரித்த வெடிகுண்டுத் தாக்குதலைத் தடுத்துநிறுத்தும் நடவடிக்கைக்கு 30 ஆயிரம் கோடி ரூபா ஒதுக்கியுள்ளது அமெரிக்கா. இது கடந்த ஆண்டை விட 3 மடங்கு அதிகம்.

ஈராக்கில் சக்திவாய்ந்த உள்ளூரில் தயாரித்த வெடிகுண்டு வீச்சில்தான் பெரும்பாலான அமெரிக்க துருப்பினர் உயிரிழந்துள்ளனர். இதையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று 'நியூயோர்க் ரைம்ஸ்' நாளேட்டின் இணையத் தளத்தில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

ஈராக்கில் கடந்த ஆண்டு தீவிரவாதிகள் தாக்கியதில் 846 அமெரிக்க சிப்பாய்கள் இறந்தனர். இதில் 407 பேர் சக்திவாய்ந்த உள்நாட்டு வெடிகுண்டுத் தாக்குதலில் இறந்துள்ளனர்.

கடந்த ஆண்டில் மட்டும் 10,593 உள்நாட்டு வெடிகுண்டுத் தாக்குதல்கள் ஈராக்கில் நடந்துள்ளன. இது முந்தைய ஆண்டை விட இருமடங்காகும்.

உள்ளூரில் தயாரித்த வெடிகுண்டுகளை ஈராக்கில் தீவிரவாதிகள்பயன் படுத்துவதைத் தடுக்கும் பணியில் ஒரு நட்சத் திர அந்தஸ்து பெற்ற ஜெனரல்தான் ஈடுபட்டிருந்தார். இது தற்போது 4 நட்சத்திர அந்தஸ்து பெற்ற ஓய்வு பெற்ற ஜெனரலிடம் ஒப்படைக்கப்பட்டுள் ளது.

இராணுவ அதிகாரிகளிடம் நடத்திய விசாரணையில் இந்தத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

(ஐ)

## அதிபர் தேர்தலில் வாக்களிக்க தயாராகின்றனர் கெய்ட்டி மக்கள்

கெய்ட்டி,பெப். 8

கெய்ட்டி ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்க மக்கள் தயாராகிவருகின்றனர். முன்னர் ஜனாதிபதியாக இருந்த ஜீன் - பேர்ட்றான்ட் அரிஸ்ரிட் பதவி நீக்கப்பட்டு நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்ட பின் அங்கு நடைபெறும் முதலாவது தேர்தல் இது. அரிஸ்ரிட் பதவி நீக்கப்பட்ட பின் அங்கு தேர்தல் நடைபெற ஏற்பாடுகள் இடம்பெற்ற போதும் அமைதி இன்மை காரணமாக பல தடவை அது ஒத்திவைக்கப்பட்டது.

129 ஆசனங்களை உடைய கெய்ட்டி நாடாளுமன்றத்திற்கு புதிய ஜனாதிபதி தெரிவுசெய்யப்பட உள்ளார். தேர்தல் நடவடிக்கைகளை கண்காணிக்கும் பணிகளில் ஐ.நா.அமைதிப் படையினர் ஈடுபட்டுவருகின்றனர்.

அமெரிக்காவும் ஐக்கிய நாடுகள் சபையும் இந்தத் தேர்தலில் கெய்ட்டி மக்களை வாக்களிக்குமாறு வற்புறுத்தி வருகின்றன. மிக நீண்டகாலமாக அரசியல் உறுதிப்பாடின்றிக் காணப்படும் கெய்ட்டிக்கு ஒரு மாற்றத்தை கொடுக்கப் போகும் தேர்தல் இது என அவை கெய்ட்டி மக்களை வலியுறுத்தி வருகின்றன.

2004ஆம் ஆண்டில் இருந்து இதுவரை கெய்ட்டி இடைக்கால அரசு ஒன்றினாலேயே நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. முன்னணியில் உள்ள வேட்பாளர்கள் அரிஸ்ரிட்டின் முன்னாள் சகாக்களாவர். றெனி பிறீவல் என்பவரும் வர்த்தக பிரமுகரான சாள்ஸ் ஹென்றி பாக்கர் என்பவருமே பிரதான போட்டியாளர்களாவர்.

[illegible] வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். அங்குள்ள வானொலிகளிலும் தேர்தல் [illegible] பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவு



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 25 | 05 |
| - | - |
| 10 | 02 |
| - | - |
| 1967 | 2005 |

## திருமதி தெய்வரஜனி சிவலிங்கராஜா

*(ஆசிரியை - யாழ். மணியகாரன் தோட்டப் பாடசாலை)*

ஓராண்டு பறந்தோடிப் போனாலும்
பசுமை நினைவுகள் மட்டும் மறையவே மாட்டாது.

'ரஜனி இல்லம்'
கரணவாய்,
கரவெட்டி. (46554) (24-11-15)

- குடும்பத்தினர்.

## கலாசார உதவியாளருக்கு!

கலாசார திணைக்களத்தின் அனுசரணையுடன் இலங்கை கலைக் கழகத்தின்தேசிய நாடக சபையால் ஏற்பாடு செய்யப்பட்ட நாடகப் பிரதிப் போட்டி தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் யாழ். பிரதேச செயலகத்தில் இடம்பெறவுள்ளது. அனைத்துப் பிரதேச செயலகங்களில் உள்ள கலாசார அபிவிருத்தி உதவியாளர்கள் அனைவரையும் இந்தக் கலந்துரையாடலில் தவறாது கலந்துகொள்ளுமாறு தேசிய நாடக சபை அதிகாரி கேட்டுகொண்டுள்ளார்.

(ஓ-190)

## SPECIAL ENGLISH CLASS

**விசேட ஆங்கிலமொழி வகுப்பு
மீண்டும் ஆரம்பம்**

**11.02.2006**

★ *வழமையான சனி, ஞாயிறு வகுப்புகள்*

**2 - 4 பிற்பகல்**

தொடர்பு:

**நிர்வாகி,
NEW SCIENCE HALL
கன்னாதிட்டி - யாழ்ப்பாணம்.**

(46550)(32-11-15-24)

# UNIVERSITY OF JAFFNA SRI LANKA

## Faculty Of Arts

## CERTIFICATE COURSE IN ENGLISH FOR SCHOOL LEAVERS - 2005/06

Applications are invited from eligible candidates for registration of the above course to be conducted after working hours on weekdays and on Saturdays at the ELTC, University of Jaffna.

1. *Duration of the Course:* One Academic Year (480 hours)
2. *Admission requirements:*
   Those who have not obtained admission to Universities & Possess the following requirements:
   a) The candidate should fulfill the basic requirement for admission to Sri Lankan Universities.
   b) The candidate should have a pass in English in the G.C.E (O/L)
   c) The candidate shoule not be more than 30 years of age.
3. *Charges for the course:*
   1) Application form Rs. 200/-
   2) Registration fee Rs. 200/-
   3) Course fee Rs. 10,000/-
4. *Selection:* Selection will be based on a written test
5. *Closing Date:* 27 th Feburary 2006

*Application Forms:* Application forms could be obtained from the Assistant Registrar, Examinations and Admissions on a payment of Rs. 200/- at the Shroff's counter or at People's Bank - Jaffna University Branch. Duly filled applications should be forwarded on or before 27th February 2006 to the Assistant Registrar, Examinations and Admissions. University of Jaffna. Please write "Application for Certification Course in English for School Leavers " on the top Left side of the envelope.

**The Registrar,**
07.02.2006 (C/47759)

# ஜயோதா

## உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தோடர் இல. 6497795 முதல் 6508169 வரை. சீட்டிழுப்பு இல. 209 திகதி 06-02-2006

## வெற்றி எண்கள்

**8 7 3 5 4 2** சுப்பர் எண் **25**

ஜக்பொட் பரிசு ரூ. **17,004,725/-** வெல்லப்பட்டுள்ளது

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | 01 | 17,004,725/= | 17,004,725/= |
| இடது பக்கமிருந்து முதல் 6 எண்கள் | 0 | 1,000,000/= | - |
| இடது பக்கமிருந்து முதல் 5 எண்கள் | 09 | 50,000/= | 450,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 4 எண்கள் | 92 | 5,000/= | 460,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 3 எண்கள் | 910 | 500/= | 455,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 2 எண்கள் | 9084 | 50/= | 454,200/= |
| இடது பக்கமிருந்து முதல் 1 எண் | 90031 | 10/= | 900,310/= |
| வலது பக்கமிருந்து முதல் 5 எண்கள் | 09 | 5,000/= | 45,000/= |
| வலது பக்கமிருந்து முதல் 4 எண்கள் | 91 | 1,000/= | 91,000/= |
| வலது பக்கமிருந்து முதல் 3 எண்கள் | 908 | 100/= | 90,800/= |
| வலது பக்கமிருந்து முதல் 2 எண்கள் | 9001 | 20/= | 180,020/= |
| | | மொத்தம் ரூ. | **20,131,055/=** |
| மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி | 08 | 75,325/= | 602,600/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை **20,733,655/-**

ரூ. 75,325/- பெறுமதியான வெற்றி மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| குருணாகல் | 6504396-3-68 |
| மொனராகல | 6506243-4-29 |
| பொலன்னறுவ | 6501114-6-46 |
| கொழும்பு | 6504033-8-44 |
| நுவரேலியா | 6506983-2-78 |
| அம்பாந்தோட்டை | 6500485-1-28 |
| புத்தளம் | 6503526-2-47 |
| மாத்தளை | 6500737-1-35 |

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட்

**ரூ. 10,000,000/-**

தொடர் இல. 7420221 க்கு மேற்பட்ட செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2006 பெப்ரவரி 09 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

## சிறுவர் கழகம் அமைப்பு

வலி.தென்மேற்கு, பெப்.8

வறிய நிலையிலுள்ள மாணவர்களின் கல்வியை ஊக்குவிப்பதற்காக வலி. தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலகப் பிரிவில் 'சொண்ட்' நிறுவனத்தின் அனுசரணையுடன் பெரியவிளான், வடலியடைப்பு ஆகிய கிராமங்களில் சிறுவர் கழகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இக்கழகங்களில் அங்கத்துவம் பெற்ற சிறுவர்களுக்கு மாதாந்த கல்வி ஊக்குவிப்பு வழங்கும் திட்டத்தின் கீழ் முதலாவது கட்டக் கொடுப்பனவு அண்மையில் வழங்கப்பட்டுள்ளது. இக்கழகங்களின் செயற்பாட்டைப் பொறுத்து 'சொண்ட்' நிறுவனத்தினால் தொடர்ந்தும் இவர்களுக்குக் கொடுப்பனவு வழங்கப்பட உள்ளதாக வலி. தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலகப் பிரிவு சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் தெரிவித்தார்.

(ஓ-135)

# 10ஆவது ஆண்டு நினைவுகளோடு...



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 10 | 08 |
| - | - |
| 05 | 02 |
| - | - |
| 1928 | 1996 |

## திருமதி பத்திநாதர் திரேசம்மா

*(ஜெயா கிறீம் ஹவுஸ் உரிமையாளர்)*

**"என்றும் உம் ஆன்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

*"பத்தி பவனம்",
21/1, சென். மேரிஸ் வீதி,
நாவாந்துறை,
யாழ்ப்பாணம்.*

*என்றும் உம் பிரிவால் துயருறும்:*
**பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்,உறவினர்கள்.**

(46547)(32-11-15-24)

# மரண அறிவித்தல்

## செல்லர் சின்னத்துரை (வைத்தியர்)



வேலணை கிழக்கு, 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்த செல்லர் சின்னத்துரை (வைத்தியர்) 04.02.2006 அன்று இறைவனடி சேர்ந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற மாதர் செல்லர் சின்னத்தம்பி - சின்னப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும் காலஞ்சென்ற பராசக்தியின் அன்புக் கணவரும் காலஞ் சென்றவர்களான சின்னத்தம்பி - முருகேசு (வைத்தியர்) ஐயம்பிள்ளை - பொன்னாச்சி தம்பதியரின் அருமை மருமகனும் காலஞ்சென்ற சரவணமுத்து, நடராசா (நவாலி), தவமணி, மனோன்மணி, சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் லோகநாயகி (மருத்துவதாதி - சங்கானை வைத்தியசாலை), இராதாகிருஷ்ணன் (பிரான்ஸ்), தில்லைச்சிவம் (பிரான்ஸ்), காலஞ்சென்ற திருமகள் மற்றும் கலைமகள் (பிரான்ஸ்), இளமுருகன் (லண்டன்), தேவகி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆறுமுகம் கந்தையா (ஓய்வுபெற்ற யாழ். இ.போ.ச. சாலை உத்தியோகத்தர்), ஐயம்பிள்ளை நவரெத்தினம், சின்னத்தம்பி துரைராசா (ஓய்வுபெற்ற உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர்), சரவணமுத்து நாகேஸ்வரி, நடராசா சரஸ்வதி (நவாலி), காலஞ்சென்ற முருகேசு விநாசித்தம்பி (வைத்தியர்) ஆகியோரின் மைத்துனரும் கார்த்திகேசு இராசரெத்தினம் (ரட்ணம் ஸ்ரோர்ஸ் வேலணை), ஜெயந்திமலர் (பிரான்ஸ்), பத்மா (பிரான்ஸ்), சர்மிளா (லண்டன்), சிறீதரன் (பிரான்ஸ்), செபமாலைராசா (பிரான்ஸ்), கந்தையா, செல்வரெத்தினம் ஆகியோரின் மாமனும் ஹம்சத்தனி, சயந்தன், கயலக்சி, யுகேந்திரன், பிரான்ஸைச் சேர்ந்த டியான், சங்கீத், அபிநயன், சுபதா, காவியா, விதுலன், அஜித், சுஜித்,வினித், லண்டனைச் சேர்ந்த சுரேகா, மதுரா, செர்லின் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (08.02.2006) புதன் கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாளையங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

*4ஆம் வட்டாரம்,
வேலணை கிழக்கு,
துறையூர்.* (46548) (42-11-15-24)

தகவல்:
செ.நடராசா (சகோதரன்),
கா.இராசரெத்தினம் (மருமகன்).

# 87th ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா - 2006

## NATIONAL DAY CELEBRATION - 2006

அரியாலை, யாழ்ப்பாணம் ARIYALAI, JAFFNA.

## மாவட்ட ரீதியிலான அணிகளுக்கான விளையாட்டுப் போட்டிகள்



★ துடுப்பாட்டம் (மென்பந்து)
[7 பேர், 12 ஓவர்கள்]

★ உதைபந்தாட்டம்
[திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், அரசு சார்புடைய நிறுவனங்கள்]

★ கரபந்தாட்டம்
[Set/up]

★ வலைப்பந்தாட்டம்
(பெண்கள்)

மாவட்ட ரீதியிலான போட்டிகளுக்கு விண்ணப்பக் கட்டணம்: ரூபா 200/-
விண்ணப்பத்துடன் செலுத்தப்படல் வேண்டும்.
சகல போட்டிகளுக்குமான விண்ணப்ப முடிவு திகதி:

20-02-2006 ஆகும்.

எமது பிரதேச வாழ் இளைஞர்கள், யுவதிகள், பெரியோர்கள், சிறியோர்களுக்கான ஏராளமான விளையாட்டு நிகழ்வுகள் இறுதிநாள் (புதுவருடம் அன்று) ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன. அனைவரும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

விண்ணப்பங்கள் பெற்று உடன் ஒப்படைக்கவேண்டிய இடம்:

| | | | |
|---|---|---|---|
| திரு.S.C.செல்வராஜா<br>தலைவர் விளையாட்டுத்துறை,<br>இல.847, நாவலர் வீதி,<br>அரியாலை, யாழ்ப்பாணம். | காவேரி சில்க்<br>48, பெரியகடை,<br>யாழ்ப்பாணம். | லிட்டில் இந்தியன் பெஷன்<br>77, பெரியகடை,<br>யாழ்ப்பாணம். | திரு.நி.துஷ்யந்தன்<br>செயலாளர், விளையாட்டுத்துறை,<br>15/5, கச்சேரி கிழக்கு, புகையிரத நிலைய வீதி,<br>அரியாலை, யாழ்ப்பாணம். |

(46546) (24-11-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிணறுகளைப் பாதுகாப்பானவையாகப் பேணுமாறு மக்களுக்கு அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,பெப்.8

வலி.தென்மேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் பாதுகாப்பற்ற நிலையில் உள்ள கிணறுகளை உடன் பாதுகாப்பானவையாக மாற்றுவதற்குப் பிரதேச சபையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதன் ஒரு கட்டமாக 'கிணறுகளில் தவறி வீழ்வதனால் ஏற்படும் மரணங்கள்' எனும் தலைப்பில் பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. அந்த அறிவுறுத்தலில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யாழ். நீதிவான் நீதிமன்ற கட்டளைப் பிரகாரம் வீடுகள், காணிகள், வயல்கள், தோட்டங்கள் என்பனவற்றில் உள்ள கிணறுகள், இடிகுண்டுகள், பாதாளக் கிணறுகள் என்பன கீழ்வரும் ஒழுங்கில் பாதுகாப்பானதாக 3 மாத கால இடைவெளிகளில் மாற்றப்படவேண்டும்.

* கிணறுகளைச் சுற்றி உயரமாகச் சுவர்கள் கட்டப்படவேண்டும். அதாவது, சிறுபிள்ளைகளுக்கு எட்டாத அளவு உயரத்திற்கு சுவர் அமைத்தல் வேண்டும்.

* கிணற்றின் மேற்பகுதியை சூரிய ஒளி புகக்கூடியவாறு கம்பி வலைகள் மூலம் மூடுதல் வேண்டும்.

* தண்ணீர் எடுக்கும் போது மட்டும் சிறு வாசலாக உள்ள மூடியைத் திறந்து தண்ணீர் எடுக்கக்கூடியதாக அமைத்தல்.

* கிணற்றினுள்ளே தவறுதலாக விழும் சந்தர்ப்பங்களில் கம்பிகளைப் பிடித்துக் கொண்டு மேலே ஏறக் கூடியவாறு கிணற்றுக்குள் கட்டப்படும் படிகளின் நடுவே கம்பி இணைத்துக் கட்டப்படவேண்டும்.

* இதுவரை மேற்படி நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்படாது இருந்தால் இதனை உடன் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

* இந்த நடவடிக்கைகளை வலி.தென்மேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட அனைத்து பாதுகாப்பற்ற கிணற்று உரிமையாளர்களும் மேற்கொள்ளத் தவறின் அவர்களுக்கு எதிராக நீதிமன்றில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-185)

## சுற்றுமதில் அமைக்க நிதி

சங்கானை அ.மி.த.க. பாடசாலைக்கென அண்மையில் கொள்வனவு செய்யப்பட்ட காணிக்குச் சுற்றுமதில் அமைப்பதற்கென சிறுவர் பாதுகாப்பு நிதியம் இரண்டரை லட்சம் ரூபாவை வழங்கியது.

இந்த நிதி மூலம் சுற்றுமதில் கட்டி முடிக்கப்பட்டதென்றும் இதேவேளை, இக்காணியின் நுழைவாயிலில் 'கேற்' ஒன்று போடுவதற்காக முருகமூர்த்தி கோயில் வீதியைச் சேர்ந்த சிவஸ்ரீ சிவானந்தக் குருக்கள் நித்தியானந்தக் குருக்கள் என்பவர் 15 ஆயிரம் ரூபா வழங்கியுள்ளார் என்றும் பாடசாலை அதிபர் ஆ.பேரின்பநாதன் தெரிவித்துள்ளார்.(த-29)

# ஊடகவியலாளர்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் தொடர்பாக ஆராய்வு

யாழ்ப்பாணம்,பெப்.8

வடபகுதியிலுள்ள ஊடகவியலாளர்கள் தாம் எதிர்கொள்ளும் நெருக்கடிகளை தத்தமது பகுதி பத்திரிகையாளர் சங்கம் ஊடாக எமக்கும் தெரியப்படுத்தினால் நாம் அதனைப் பாதுகாப்பு அமைச்சின் கவனத்துக்குக் கொண்டு வந்து குடாநாட்டில் ஊடகவியலாளர்கள் அச்சமின்றிப் பணியாற்ற உதவுவோம்.

இவ்வாறு தெரிவித்துள்ளனர் தென்பகுதியைச் சேர்ந்த மூத்த ஊடகவியலாளர்கள்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தென்னிலங்கையைச் சேர்ந்த மூவினப் பத்திரிகையாளர்களுக்கு வட இலங்கை பத்திரிகையாளர் சங்கம், யாழ்ப்பாணம் ஊடகவளங்கள் பயிற்சி நிலையத்தில் வரவேற்பு நிகழ்வொன்றை நடத்தியது. முரண்பாட்டுக் கற்கைகளுக்கான நிறுவனம் வடக்கு-தெற்கு ஊடகவியலாளர் சந்திப்பிற்கு ஏற்பாடு செய்திருந்தது.

இந்நிகழ்வில் குடாநாட்டில் பொதுமக்கள் மட்டுமல்லாது ஊடகவியலாளர்களும் படையினரின் அச்சுறுத்தல்களுக்கு ஆளாகி வருகின்றனர் என்று யாழ். மாவட்ட ஊடகவியலாளர்கள் தென்பகுதி ஊடகவியலாளர்களுக்கு எடுத்துக் கூறினர்.

யாழ்ப்பாணத்தில் கடந்த சில மாதங்களாக இராணுவத்தினர் மற்றும் இராணுவப் புலனாய்வாளர்களின் தாக்குதல்களுக்கும் பயமுறுத்தல்களுக்கும் ஊடகவியலாளர்கள் உள்ளாகி வருகின்றனர்.

தற்போதும்கூட ஊடகவியலாளர்கள் திட்டமிட்ட முறையில் படையினரின் தாக்குதல்களுக்குள்ளாகி வருகின்றனர். தமிழ் ஊடகவியலாளர் என்பதற்காகவே இராணு[illegible] எம்மைத் தாக்குகின்றனர் என்றும்- கு[illegible] ஊடகவியலாளர்கள் மேலும் தெரிவித்தனர்.

இதனைக் கேட்ட தெற்கு ஊடகவியலாளர்கள் மேலும் தெரிவித்ததாவது:-


பத்திரிகையாளர்களில் வடக்கு, தெற்கு என்று பேதம் இருக்கமுடியாது. நாம் இன்று பொதுச் சேவைப் பணியாளர்களாகச் சமூகத்திற்குச் சேவையாற்றி வருகின்றோம்.

தென்பகுதியில் ஐந்து பலம் வாய்ந்த ஊடகவியலாளர் அமைப்புகள் ஒருங்கிணைந்து ஓர் அமைப்பாகச் செயற்படுகின்றன.

எமது உரிமைகள் மட்டுமல்ல அரசின் நலன்திட்டங்களையும் நாம் பெறுவதற்கு ஒற்றுமையான - வலுவான - அமைப்பு எமக்கு அவசியம்.

பத்திரிகையாளர்கள் எந்தவகையிலும் பாதிக்கப்பட்டால் நாம் உரத்துக் குரல் கொடுக்கும் போது இனிவரும் காலத்திலாவது கடமையைப் பாதிப்பில்லாமல் நிறைவுசெய்ய முடியும் - என்று கூறினர்.

தொடர்ந்து அன்று மாலை 4.45 மணியளவில் தென்னிலங்கைப் பத்திரிகையாளர்கள் யாழ். அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளையும் சந்தித்துக் கலந்துரையாடினர். (த-203)



கியூடெக், கரித்தாஸ் நிறுவனத்தினால் மாதகல், புக்கைப்புலோ பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இரவு நேரப் படிப்பகத்திற்கான மண்டபத்தினை இயக்குநர் அருள்திரு. திரு.கி.ஜோ.ஜெயக்குமார் அடிகளார் நாடாவெட்டித் திறந்துவைப்பதை படத்தில் காணலாம். (த-190)

# கோப்பாய்ப் பிரதேசத்திலுள்ள அமைப்புகள் குருதிக்கொடை

கோப்பாய்,பெப்.8

கடந்த வருடம் இறுதிப் பகுதியில் அனுஷ்டிக்கப்பட்ட உலகக்குருதி கொடையாளர்கள் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட விழிப்புணர்வுச் செயற்பாட்டின் பயனாக கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் பல்வேறு அமைப்புகள் குருதித் தானத்தை வழங்கியுள்ளன.

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, கோப்பாய் இளைஞர் சேவைகள் மன்றம், நீர்வேலி இந்து இளைஞர் பேரவை, கோப்பா[illegible] பிரதேச செயலகம், கோப்பாய் தேசிய கல்[illegible]யியற் கல்லூரி, கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை, உரும்பிராய் இளைஞர் அமைப்பு ஆகியவை இரத்ததான ஒழுங்கை மேற்கொண்டு வழங்கியுள்ளன.

இதன் தொடர்ச்சியாக பவள விழாவினை முன்னிட்டு புத்தூர் சோமஸ்கந்த கல்லூரி, ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டபம், வலி.கிழக்குப் பிரதேச சபை, ஆவரங்கால் விளையாட்டுக் கழகம், ஆவரங்கால் சன சமூக நிலையம் ஆகியனவும் இரத்த தானத்தை விரைவில் வழங்கவுள்ளன.

இந்த நிகழ்வுகள் கோப்பாய் உதவிப் பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலனின் ஒழுங்குபடுத்தலிற்கமைய கோப்பாய் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக யாழ். இரத்த வங்கி பொறுப்பதிகாரி எஸ். சிவசங்கர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

யாழ்ப்பாணத்திலுள்ள எந்தப் பொது அமைப்புகளும் யாழ்.போதனா மருத்துவமனையில் தன்னோடு தொடர்புகொண்டு இரத்ததான ஒழுங்குகளை மேற்கொள்ளலாமெனவும், நினைவு தினங்கள், ஞாபகார்த்த வைபவங்கள் போன்ற செயற்பாடுகளின் போதும் அப்பகுதி அமைப்புகள் தொடர்புகொண்டு இரத்த தானத்தை வழங்கலாம் எனவும் கூறினார். (த-72)

# குடாநாட்டில் நலிவுற்ற குடும்பங்களுக்கு 3 மாதங்களுக்கான நிவாரண விநியோகம்

## விரைவில் வழங்கப்படும் என அரச அதிபர் அறிவிப்பு

வலி.மேற்கு.பெப்.8

யாழ். மாவட்டத்தில் வருமானம் குறைந்த - நலிவுற்ற குடும்பங்களுக்கும் இடம்பெயர்ந்து வசிக்கும் மக்களுக்கும் கடந்த ஆண்டுக்கான ஒக்ரோபர், நவம்பர், டிசெம்பர் ஆகிய மூன்று மாதங்களுக்குமான இலவச உலர் உணவு நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சகல பிரதேச செயலர்களுக்கும் யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ் சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளார்.

இடம்பெயர்ந்து வசிக்கின்ற குடும்பங்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட சமுர்த்தி நிவாரண முத்திரைகள் மீளப்பெறப்படவுள்ளன. அவற்றுக்குப் பதிலாக இடம்பெயர்ந்தோர் நிவாரண முத்திரைகள் வழங்கப்பட்டு உலர் உணவு விநியோகம் இடம்பெறும்.

இடம்பெயர்ந்து வசிக்கின்ற குடும்பங்கள் சமுர்த்தி நிவாரண முத்திரைகள் மீளப்பெற்று, இலவச உலர் உணவு நிவாரணம் வழங்குமாறு கோ[illegible] போராட்டங்களை நடத்தி வந்தமை தெரிந்ததே.

சமுர்த்தி நிவாரண முத்திரையிலும் பார்க்க, இடம்பெயர்ந்தோருக்கு வழங்கப்படவுள்ள இலவச உலர் உணவு நிவாரணம் இருமடங்கு பெறுமதியானது என்பது குறிப்பிடத்தக்கது. (த-175)

# வேலணைப் பிரதேச சபையில் பெரும் ஆளணிப் பற்றாக்குறை

யாழ்ப்பாணம்,பெப்.8

வேலணைப் பிரதேச சபையில் ஒன்பது முகாமைத்துவ உதவியாளர்களுக்கு ஆளணித் தேவை இருந்தபோதிலும் ஒரேயொரு முகாமைத்துவ உதவியாளர் மட்டுமே கடமையாற்றுகின்றார்.

இதனால், நிர்வாகக் கடமைகளை முழுமையாக நிறைவேற்றமுடியாமல் இருப்பதாக வேலணைப் பிரதேச சபை செயலாளர் கை.மகேந்திரலிங்கம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்:-

எமது சபைக்கு அரசினால் அங்கீகரிக்கப்பட்ட எழுதுநர் தரத்திலான முகாமைத்துவ உதவியாளர்களுக்கான ஆளணி ஒன்பது. ஆனால், நீண்டகாலமாக ஒரேயொரு முகாமைத்துவ உதவியாளர் (எழுதுநர்) மட்டுமே கடமையாற்றி வருகின்றார்.

எனவே, திட்டமிடல், நிர்வாகம், கணக்குப் பகுதி வேலைகளை நிறைவேற்ற முகாமைத்துவ உதவியாளர்கள் நியமிக்கப்படவேண்டும் - என்றார்.

இதேவேளை -

வேலணைப் பிரதேச சபை 5 உப அலுவலகங்களைக் கொண்ட பாரிய பிரதேசம் ஆகும். ஒவ்வொரு உப அலுவலகத்திலும் குறைந்தது 5 சுகாதாரத் தொழிலாளர் நியமிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், 5 உப அலுவலகங்களிலும் சுகாதாரத் தொழிலாளர்கள் தலா ஒருவர் வீதமே நியமிக்கப்பட்டுள்ளனர். இதனால், இப்பிரதேசத்தில் சுகாதாரம் பேணப்பட முடியாதுள்ளது எனவும் செயலாளர் மேலும் தெரிவித்தார்.

(த-185)

# பண்டிதர் பரந்தாமனின் நூல் கிளிநொச்சியில் வெளியீடு

கிளிநொச்சி.பெப்.8

பண்டிதர் வீ.பரந்தாமனின் 'திருக்குறளின் செந்தமிழாட்சி' என்ற நூலின் வெளியீட்டு விழா கடந்த 4ஆம் திகதி கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

தமிழீழ நிதித்துறைப் பொறுப்பாளர் செ.தமிழேந்தி நிகழ்வுக்குத் தலைமை வகித்தார். கிளிநொச்சி தமிழ்ச் சங்கத் தலைவர் வே.பரமநாதபிள்ளை நூலை வெளியிட்டு வைத்தார். நூலின் மதிப்பீட்டுரையைத் தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் பொ.இளங்குமரன், புலிகளின் மூத்த பிரமுகர் யோ.யோகி ஆகியோர் நிகழ்த்தினர். நிகழ்வில் தமிழ்ச் சங்க உறுப்பினர்கள், நிதித்துறை, வணிக நிலையங்களின் பணிப்பாளர்கள், பணியாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (த)



'திருக்குறளின் செந்தமிழாட்சி' நூல் வெளியிட்டு வைக்கப்படுவதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

சிசில் குளிர்சாதனப் பெட்டி புதியது விற்பனைக்குண்டு. தொடர்பு: 17/19, பேச்சி அம்மன் கோயிலடி, நாவலடி லேன், யாழ்ப்பாணம். T.P.: 0777 246154 (46531)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Prima, Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம். (Electronic நிறுவை) தொடர்பு: (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (46499)

## கோழிக்குஞ்சு விற்பனை

தரமான Original Prima பேட்டுக்குஞ்சுகள் (ஒரு மாதம் நிரம்பியது) உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (46498)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

1½ வயது ஆண் ஜேர்மன் Shepard, 1½ வயது பெண் அயிர்ஸ், 8அடி இரும்புக் கூட்டுடன் சேர்த்து மலிவு விலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: S.சிறீரங்கன். T.P.: 0777 222180 (47737)

நல்ல இன அல்சேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: த.பாலசூரியன், 147, நாவலர் வீதி, மனோகராச் சந்தி, யாழ்ப்பாணம். (46530)

## சிறுகுறிஞ்சா இலை தேவை

சிறுகுறிஞ்சா இலை வெட்டிய உடன் உலராமல் fresh ஆக தேவை. சிறு குறிஞ்சா வைத்திருப்பவர்கள் உடன் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு:- BIOTEC INTERNATIONAL Ltd.
131/ 2, PALALY ROAD, THIRUNELVELY, JAFFNA.
Telephone 021 4590907.
(விவசாயப்பண்ணைக்கு அருகில்)
(46534)(32-16-19)

## பணிப்பெண் தேவை

தாயும் பிள்ளையும் (படிக்கும் பிள்ளை) அல்லது அனாதைப் பெண் 45 வயதிற்கு மேற்பட்டவராகவும் 50 வயதிற்குட்பட்டவராகவும் நற்குணசாலியாகவும் திடகாத்திரமானவராகவும் இருத்தல்வேண்டும். தொடர்பிற்கு: பொ.வேலுப்பிள்ளை, 41/4, செம்மணி வீதி, யமுனாரி குள ஒழுங்கை, நல்லூர். (46532)

## கடை வாடகைக்கு

நாவலர் வீதியில் இலுப்பையடிச் சந்தியில் (றெக்கோடிங் பார் அருகில்) கடை வாடகைக்குண்டு. தொடர்பு: T.P.: 0777 111147, 256, நாவலர் றோட், இலுப்பையடிச் சந்தி, யாழ்ப்பாணம். மேலதிக விவரம் நேரில் வரவும். (46503)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1975, திருவோணம், 3ஆம் பாதம், மகர ராசி, 12 இல் செவ்வாய், யாழ்ப்பாணத்தில் சொந்தத் தொழில் செய்யும் மணமகனுக்கு அழகிய, நிறமுள்ள மணமகள் தேவை. தொடர்பு: ஸ்ரீமோகனதாஸ், T.P.: 0777 179130 (46513)

## காணவில்லை

கருவெள்ளை நிறமுடைய V.P., 29/11 குறியுடைய, 9 மாத சினையுடைய மாடு கந்தர்மடத்தில் காணவில்லை. கண்டுபிடித்தவர்கள் 021 222 9384 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். கண்டுபிடிப்பவர்களிற்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். (46506)

## பதவி வெற்றிடம்

*சுகர் னி மெடிக்கல் சென்ரரில் தாதியர், தாதி உதவியாளர், மருந்தக உதவியாளர் போன்ற பணிகளில் இணைந்து பணிபுரிய விரும்புவோரும் பயிற்சிபெற விரும்புவோரும் தமது சுயவிவரக் கோவையுடன் 10.02.2006 வெள்ளிக்கிழமை ஒரு மணிக்கு 578, ஆஸ்பத்திரி வீதியிலுள்ள எமது நிலையத்திற்கு நேரில் வரவும்.*
(46535)(18-32-16-19)

## கவிதைக்கான பயிற்சிப் பட்டறை

யாழ்.திருமறைக் கலாமன்றத்தின் இளையோர் அவையினரின் ஏற்பாட்டில் 'சிருஷ்டிப்புக்கான தேடல்' என்னும் கவிதைக்கான பயிற்சிப் பட்டறை எதிர்வரும் 12ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9மணி தொடக்கம் மறைக்கல்வி நடுநிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சிப் பட்டறையில் வளவாளர்களாக கவிஞர்களான சோ.பத்மநாதன், பா.மகாலிங்கசிவம், நாகசிவசிதம்பரம், த.ஜெயசீலன் ஆகியோர் பயிற்சிகளை வழங்குவர்.

கலந்து கொள்ள விரும்புவோர் 11 ஆம் திகதிக்கு முன்னர் தமது பெயர்களை மன்ற அலுவலகத்தில் பதிவு செய்துகொள்ளுமாறு இளையோர் அவைத் தலைவர் ஜோ.ஜெஸ்தின் கேட்டுள்ளார். (த-30)

## திருமண வாழ்த்து

இறைவன் திருவருள் துணைகொண்டு இன்று (08.02.2006) புதன்கிழமை திருமண பந்தத்தில் இணையும்



ரமேஸ்குமார் அஜந்தா

தம்பதியினரை பல்லாண்டுகாலம் சிறப்புடன் வாழ மனமார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:
ரெலிகொம் நண்பர்கள்
ந.உமாகரன்,
தில்லை சுரேஸ்குமார்,
மா.துரைசிங்கம்,
க.அன்பழகன், சி.கேதீஸ்வரன்,
கி.மன்மதன், சா.உக்கன்ஸ்.

(46527) (24-32-16-19)

## கொக்குவில் கடைகளில் திருட்டு

கொக்குவில் சந்தியில் உள்ள மூன்று வர்த்தக நிலையங்கள் நேற்று முன்தினமிரவு இனந்தெரியாதோரால் திருடப்பட்டுள்ளன.

மக்கள் நடமாட்டமில்லாததைப் பயன்படுத்தி கடைகளை உடைத்து உட்சென்ற திருடர்கள் பால்மா, சிகரட் உட்பட பெறுமதியான பொருள்களைக் களவாடிச் சென்றுள்ளனர்.

இந்த வர்த்தக நிலையங்களில் முன்னரும் ஒரு தடவை திருட்டுச் சம்பவம் இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது.

அண்மைக் காலங்களில் இவ்வாறான கொள்ளைகள் குடாநாட்டின் பல பகுதிகளிலும் இடம்பெ று வருவது அனைவருக்கும் அச்சத்தையும் பெரும் விசனத்தையும் ஏற்படுத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது.

## ஒரு மணிநேர இலவச சிங்கள வகுப்பு

1. இன்றைய அத்தியாவசிய தேவையின் பொருட்டும்
2. வேலைவாய்ப்பின் சந்தர்ப்பத்தினை அதிகரிக்கவும்
3. வேலையில் ஊதியத்தினை அதிகரிக்கவும்
4. விருப்பின்பேரில் வேறொரு மொழியை கற்றுக்கொள்ளவும்

**உங்களுக்கு இது ஒரு சந்தர்ப்பம்**

அடிப்படையான சொற்கள், அமைப்புக்கள், வசனங்கள் மூலம் ஒரே நாளில் சிங்களத்தினை கதைக்க கற்றுக்கொள்ளுங்கள்

இடம் : **SAAMSTECH**
233/4, Kasthuriar Rd, Jaffna
( ராஜா திரையரங்கு அருகில் )
காலம் : 11.02.2005 சனிக்கிழமை
காலை 9.00 முதல் 5.00 மணிவரை ஒவ்வொரு மணிநேரமும்

**அனுமதி இலவசம்**

அனைவரும் கலந்துகொள்ளலாம்

கற்கை நெறி வழிகாட்டியும் சான்றிதழும் இலவசம்

# மரண அறிவித்தல்

# கந்தையா மயில்வாகனம்



இல.40, வைரவர் கோயில் வீதியைப் பிறப்பிடமாகவும் நாயன்மார்கட்டை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா மயில்வாகனம் அவர்கள் 04.02.2006 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் கந்தையா - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் ருக்மணியின் அன்புக் கணவரும் சிவரூபன் (சுவிஸ்), கலைச்செல்வி (சுவிஸ்), சுரேஷ்குமார் (சுவிஸ்), ரெனிச்செல்வி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சற்குணவதி (சுவிஸ்), சூசை (சுவிஸ்), சுசீலா (சுவிஸ்), குலசங்கர் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சதாசிவம் (இ.மி.ச.), குணம், புஸ்பராணி (சுவிஸ்), வசந்தகுமாரி (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் செல்வராணி, ராஜேஸ்வரி, ராகுலன் (சுவிஸ்), காந்தன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் அபர்ணா, ரொமினா, ஆர்த்திகா, கபிலன், ரெக்சினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.02.2006) புதன் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 3 மணிக்கு அரியாலை சித்துப்பாத்தி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

33, செம்மணி வீதி,
நாயன்மார்கட்டு.

தகவல்:
ருக்மணி (மனைவி),
பிள்ளைகள்.

(46538) (24-32-16-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலுக்கு எதிரான ஐ.தே.க மனு தள்ளுபடி புதிய மனுவை அக்கட்சி தாக்கல் செய்தது

கொழும்பு, பெப்.08

2004ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலின் அடிப்படையில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்தும் விதத்தில் தேர்தல் ஆணையாளர் வேட்புமனுக் கோருவதைத் தடை செய்யும்படி உத்தரவிடக் கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஐ.தே.கட்சி தாக்கல்செய்த மனுவை, அதிலுள்ள சட்ட நுணுக்கத் தவறு காரணமாக விலக்கிக் கொள்வதற்கு மனுதாரர்கள் முன்வந்தனர். அதையடுத்து அந்த மனுவை நேற்று நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

எனினும், புதிய மனு ஒன்றை உரிய முறைப்படி தாக்கல் செய்ய நீதிமன்றம் தடை எதுவும் விதிக்காததால், அப்படி ஒரு மனுவை உடனடியாகவே தாக்கல்செய்ய ஐ.தே. கட்சி தீர்மானித்தது. நேற்று மாலையில் புதிய மனுத் தாக்கல் செய்யப்பட்டது. அது இன்று நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்படுகின்றது.

மேற்படி முதலாவது மனு நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நீதியரசர்கள் கே.ஸ்ரீபவன், சிசிர டி ஆப்ரூ ஆகியோர் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

அப்போது அரசுத் தரப்பில் ஆஜரான அரச சட்டத்தரணி நெரின்புள்ளே, மேற்படி மனுவில் மனுதாரரின் நிவாரணக் கோரிக்கைகளில் ஒன்றாக, சம்பந்தப்பட்ட தேர்தலுக்கான வேட்புமனு கோரப்படுவதைத் தடை செய்யும் இடைக்கால உத்தரவு ஒன்றை விடுத்தல் என்ற அம்சம் அடங்கியிருக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டினர்.

அத்தகைய கோரிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்படாத நிலையில், அவ்வாறான உத்தரவு ஒன்றை நீதிமன்றம் விடுக்கமுடியாது என அவர் வாதிட்டார்.

மனுதாரர்களான ஐ.தே. கட்சியினர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி கே.என். சொக்ஸி, மனுவில் குறிப்பிடப்படாவிட்டாலும் நீதிமன்றம் அத்தகைய இடைக் காலத்தடை ஒன்றை விதிக்கலாம் எனக் குறிப்பிட்டார்.

ஆனாலும், அதை நீதிமன்றம் ஏற்கவில்லை. எனினும், மனுதாரர்கள் தமது மனுவை வாபஸ் பெற்று, சரியான வடிவத்தில் புதிய மனுவை (வழக்கை) தாக்கல் செய்யலாம் என நீதியரசர்கள் சுட்டிக்காட்டினர்.

அதற்கு மனுதாரர்கள் இணங்கியதை அடுத்து மனுவை நீதியரசர்கள் தள்ளுபடி செய்தனர்.

புதிய - சரியான - மனுவை ஐ.தே.கட்சி நேற்று மாலை தாக்கல் செய்தது. (க-3)

## தரம் 4 மாணவருக்கு விசேட வகுப்பு

தென்மராட்சி,பெப்.8

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் நான்கில் கற்கும் மாணவர்களின் கல்வித்தரத்தை மேம்படுத்த மாலை நேர வகுப்புகள் பாடசாலைகளில் நடத்தப்படவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை அறவழிப் போராட்டக் குழுவினர் மேற்கொண்டுவருகின்றனர்.

இவ் வகுப்புகளை நடத்துவதற்கென தெரிவுசெய்யப்பட்ட இருவது பேருக்கு அறவழி நிலையத்தில் வலயக் கல்வி அலுவலகத் துறைசார் அலுவலர்களால் பயிற்சிகள் வழங்கப்பட்டுவருகின்றன.

இந்த விசேட வகுப்புகளில் எழுத்து, வாசிப்பு அடிப்படைக் கணிதம் ஆகிய பாடங்கள் மாணவருக்குக் கற்பிக்கப்படவுள்ளன.

இவ் வகுப்புகளை நடத்துவதற்கு தென்மராட்சி வலயத்தைச் சேர்ந்த 20 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இப் பாடசாலைகளிலிருந்து தரம் 4 இல் கற்கும் 500 மாணவர்களுக்கு மாலை வகுப்புகள் நடத்தப்படவுள்ளன.

பாடசாலை முடிந்த பின்னர் இவ்வகுப்புகள் நடத்தப்படவுள்ளன. அதனால் மாணவர்களுக்கு மதிய உணவு வழங்க முயற்சி மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் -

இவ் விசேட வகுப்புகள் எதிர்வரும் 15ஆம் திகதி தொடக்கம் ஆறு மாத காலம் நடத்தப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-117)

## பாராட்டி வாழ்த்துகிறேன்



அகில இலங்கை D.A.M. பட்டதாரிகள் வைத்திய சங்கத் தலைவரும் சமூகத் திலகமும் பௌராணிகரும் ஆகிய

**டாக்டர் கந்தையா நவரத்தினம்**

(D.A.M. R.I.M.P.Cey.)

அவர்கள் 01.02.2006 அன்று யாழ். மாவட்ட நீதிமன்ற நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்ததையிட்டு மனம் மகிழ்ந்து பாராட்டி வழத்துகிறேன்.

வைத்திய கலாநிதி
திரு.ஈ.சுந்தரேஸ்வரன்.

(46551)(30-12-45)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை திருமதி. சந்திரகுமாரி பரமேஸ்வரன் அவர்களின் அன்புத் தாய்

**திருமதி சந்திரசேகரி - தயாநிதி**

*அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

"ஆசிரியர் கழகம்" யா-கனகரத்தினம் ம.ம.வித்தியாலயம் யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

### செபஸ்தியாம்பிள்ளை அருளானந்தம் (தியாகு)

யாழ்ப்பாணம், சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கொழும்பில் வசித்தவருமாகிய செபஸ்தியாம்பிள்ளை அருளானந்தம் அவர்கள் நேற்று (07.02.2006) செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற அமலோற்பவம் அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான அமிர்தநாதர் - எலிசபேத் தம்பதியரின் அன்பு மருமகனும் மரியசேளி (திட்டமிடல்/ நிதி உதவியாளர் நாரந்தனை றோ.க.வித்தியாலம்), ஜெவ்றி ஜிம் (World Vision - யாழ்ப்பாணம்), ஒலிவியா ஷாந்தி (இறுதி ஆண்டு யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் றோச செபஸ்ரியன் (கொழும்பு), பிலோமினா (கொழும்பு), கிறிஸ்ரீன் (யாழ்ப்பாணம்), பெனடிற் (பிரான்ஸ்), பிறிச்சந் (பிரான்ஸ்), ஜோன் ஒவ் ஆர்க் (கனடா), நீற்ரா (லண்டன்), காலஞ்சென்ற கிறிஸ்ரியன் கொண்சி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் பிறண்டா, வின்சன், டானியல், ரூபசிங்கம், ஸ்ரெலா, டங்கன், ஏபிரகாம், பற்றிமாகரன், வலன்ரைன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

17,கோயில் வீதி,
யாழ்ப்பாணம். (46568)(80-12-45)

தகவல்:
ஜெவ்றி ஜிம் (மகன்).

## சுயதொழிற் பயிற்சி

யாழ்ப்பாணம்,பெப்.8

விஞ்ஞான தொழில்நுட்ப வியல் அமைச்சு திருநெல்வேலிப் பகுதியில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் பெண்களுக்கு சுய தொழில் ஊக்குவிப்புப் பயிற்சிகள் வழங்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதற்கென திருநெல்வேலி ஜே-111, ஜே-113,ஜே-114 ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் இருந்து 30 பெண்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு அப்பகுதியில் உள்ள மூலப்பொருள்களைப் பயன்படுத்தி பழப் பதனிடல் தொடர்பான பயிற்சிகள் வழங்கப்படவுள்ளது.

இப்பயிற்சியைப் பூர்த்தி செய்த பின்னர் சுயதொழில் முயற்சிகளை மேற்கொள்வதற்கு இப் பெண்களுக்கு உதவிகள் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

(ஒ-12-86)

## இரத்ததானம்

குருநகர்,பெப்.8

யாழ். சென் ஜேம்ஸ் மகளிர் ஆரம்பப் பாடசாலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரத்ததானம் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. குருநகர் தூய விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் ஒழுங்குசெய்யப்பட்ட இந் நிகழ்வில் இவ்விளையாட்டுக் கழக உறுப்பினர்கள் உட்பட குருநகர் இளைஞர்கள் 76 பேர் இரத்ததானம் வழங்கினர்.

யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கி அலுவலர்கள் இரத்தம் சேகரிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

(ஒ-51)








## சைக்கிள் திருடினர் என மூவர் கைது

சங்கானை,பெப்.8

சங்கானை சந்தைப் பகுதியில் நேற்று சைக்கிள் திருட முயன்ற நபர் ஒருவர் பொலீஸாரிடம் சிக்கினார். இவருடன் சேர்ந்தவர்கள் என்று கருதப்படும் மேலும் இருவர் அவ்விடத்தில் வைத்து பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் மூவரும் அண்மைக் காலத்தில் சங்கானைப் பகுதியில் காணாமற்போன இருபதுக்கும் மேற்பட்ட சைக்கிள்களை தாமே திருடினர் என ஒப்புக்கொண்டுள்ளார்கள் எனப் பொலீஸார் தெரிவித்தனர். தற்போது இவர்கள் மானிப்பாய் பொலீஸாரிடம் விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ஒ-29)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சிவபாக்கியம் சங்கரசிவம்பிள்ளை

**(முன்னாள் உரிமையாளர் Jaffna Trading Company)**



தாவடி தெற்கு, கலாபவனத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் சங்கரசிவம்பிள்ளை 06.02.2006 திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரசிவம்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தாவடியைச் சேர்ந்த சிவசம்பு - பார்வதிப்பிள்ளையின் மூத்தமகளும் காலஞ்சென்ற தாவடியைச் சேர்ந்த ஐயாத்துரை - பாக்கியம் தம்பதியரின் இளையமருமகளும் சறோஜினி (கனடா), விஜயராணி (தாவடி), பவீந்திரன் (லண்டன்), தனலஷ்மி (டென்மார்க்), கலாரஞ்சினி (கனடா), காலஞ்சென்ற தயாபரன் (டென்மார்க்) மற்றும் கிருபாகரன்(கனடா), ரோகிணி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், ஜேயேந்திரன் (கனடா), இராமச்சந்திரன் (தாவடி), வசந்தி (லண்டன்), சோதிலிங்கம் (டென்மார்க்), தனபாலசிங்கம் (கனடா), கலா (கனடா), தர்சலா (கனடா), ரவி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற இராசரத்தினம் மற்றும் சிவசுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற பிரதி அதிபர், தாவடி இ.த.க. பாடசாலை), காலஞ்சென்ற கமலாதேவி (கனடா) மற்றும் இராசலஷ்மி (லண்டன்), இரத்தினேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற Dr. சுப்பிரமணியம் (கணேஷ்), அன்னலட்சுமி மற்றும் நாகராசா (ஓய்வுபெற்ற ஆசிரியர் - கனடா), நாகேஸ்வரி (லண்டன்), நாகேஸ்வரன் (சட்டத்தரணி- லண்டன்), மனோகரன் (லண்டன்), சிவபுஸ்பம் (ஓய்வுபெற்ற ஆசிரியை - இணுவில் மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்பு மைத்துனியும் கணேசப்பிரபு (MLT கனடா), காலஞ்சென்ற பூமணி ஆகியோரின் அன்புச்சகலியும், றோஜி, ராஜன், ராஜேஸ், மாலா, மலர், விஜிதா (கனடா), நிசாந்த், வைஷ்ணவி, அர்விந்த் (லண்டன்), சுஜித், சங்கீத், அஜித் (டென்மார்க்), ரஜிதா (தாவடி), கவிதா (இத்தாலி), நஜிந்தன், நிசாரா, நிருஜா, ஜதுனன், ஜனனி, கிருஷாந், கிரிசோத், வத்சலன், தூரிகா (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கனடா ரொரன்ரோவில் 13.02.2006 அன்று நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இராமச்சந்திரன் (மருமகன்-தாவடி)
சிவசுப்பிரமணியம் (தம்பி-கொழும்பு-6)

T.P.: 0112591017 (சி-47762) (30-12-45)

### திருமதி ஜெயகாந்தன் தமயந்தி

சாவகச்சேரி மகளிர் கல்லூரி வீதியைச் சேர்ந்த திருமதி ஜெயகாந்தன் தமயந்தி அவர்கள் நேற்று (07.02.2006) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மார்க்கண்டு - சாந்தநாயகி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற ஜெயகாந்தனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற ஜெயந்தன் (ஆசிரியர் பளை வேம்பொடுகேணி சி.சி.த.க.பாடசாலை), ஜெயந்திரன் (G.A.Q - யாழ். புதிய உயர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும் அருட்சோதி, நந்தகுமார் (லண்டன்), தயாநிதி, கௌரி மனோகரி (லண்டன்), லிங்கேஸ்வரகுமார் (பிரான்ஸ்), வேர்க்கை முத்துக்குமார் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், விஜயரட்ணகுமார், நடேஸ்வரி, தங்கரூபன் (CTB சாரதி), முருகதாஸ், வாசுகி, தில்லைநாயகி நடராசா (ஆசிரியர் - கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.02.2006) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் முற்பகல் 10 மணிக்கு தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தபாலக வீதி,
மகளிர் கல்லூரி முன்பாக,
யாழ்ப்பாணம். (46556)

தகவல்:
ஜெயந்திரன்
(மகன்).

### ஆறுமுகம் சோமசுந்தரம்

**(இளைப்பாறிய வைத்திய அதிகாரி)**

காரைநகர், விளானையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு தெஹிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சோமசுந்தரம் அவர்கள் நேற்று (07.02.2006) செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி தில்லையம்பலம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக்கணவரும் சந்திரகுமாரி (கொழும்பு) காலஞ்சென்ற பாலேந்திரன் (கனடா), சுரேந்திரன் (யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற ஜெயக்குமாரி (கனடா), ரவீந்திரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் சு.இரத்தினராசா, பா.சந்திராதேவி, சு.சாந்தகுமாரி, ர.சாந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும், சாந்தினி, சர்மிலா, ஜெனனி, மீரா, தர்சிகா, மயூரன், பவினா, வினித் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 10.02.2006 வெள்ளிக்கிழமை கொழும்பிலுள்ள ஜெயரட்ண மலர்ச்சாலையில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கனத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

354/9,பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
(46561)(30-12-45)

தகவல்:
மகன்மார், மகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் கடத்தப்பட்டது குறித்து

# உண்மைநிலையை சீர்தூக்கிப் பார்க்காது விஷத்தைக் கக்குகிறார் அமைச்சர் மங்கள

## வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதாக ஈழவேந்தன் எம்.பி. சாடல்

யாழ்ப்பாணம்,பெப்.8

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் கடத்தப்பட்ட விவகாரத்தில் உண்மைகளைச் சீர்தூக்கிப் பார்க்காது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதைப் போன்று விசக் கருத்துகளைக் வெளியிட்டுள்ளார் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர.

இவ்வாறு சாடியுள்ளார் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.ஈழவேந்தன்.

கடந்த இரண்டாம் திகதி கொழும்பில் செய்தியாளர்களைச் சந்தித்த வெளிவிவகார அமைச்சர் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் கடத்தப்பட்ட சம்பவத்தில் மர்மம் இருப்பதாகவும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் இது குறித்து முறையாக உரிய இடத்தில் முறைப்பாட்டை பதிவு செய்யாதமை இக்கடத்தலில் மர்மம் இருப்பதையும் அதனை புனர்வாழ்வுக் கழகம் மூடி மறைக்க முயற்சிப்பதாகவும் கருத்துத் தெரிவித்திருந்தார்.

அமைச்சரின் கருத்துக்குப் பதிலடியாக வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே ஈழவேந்தன் எம்.பி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.அந்த அறிக்கையில் ஈழவேந்தன் எம்.பி. குறிப்பிட்டுள்ளதாவது.

புனர்வாழ்வுக் கழகத்தினர் கடத்தப்பட்ட விடயத்தில் மர்மம் இருப்பதாக அமைச்சர் மங்கள சமரவீர கருத்துவெளியிட்டுள்ளார். இதனை ஊடகங்கள் சில குறிப்பாக கடந்த 3ஆம் திகதி வெளியான ஆங்கிலப் பத்திரிகை ஒன்று தலைப்புச் செய்தியாக வெளியிட்டிருந்தது. இந்தச் செய்தியை இதுவரை அமைச்சர் மறுக்கவில்லை.

இந்த ஆள்கடத்தல்கள் குறித்த சம்பவங்கள் இடம்பெற்ற வெலிகந்தவிலோ அல்லது கொழும்பிலோ உரிய வேளையில் முறையான முறைப்பாட்டை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் பதிவுசெய்யவில்லை என்றும் - எதனையோ மூடி மறைக்கவே அவர்கள் முறைப்பாட்டைப் பதிவுசெய்யவில்லை என்றும் - அமைச்சர் மங்கள சமரவீர கூறியுள்ளார்.

கடத்தப்பட்டவர்களின் குடும்பத்தினர் அனுபவிக்கும் வார்த்தைகளில் வடிக்கமுடியாத சோகத்தை உணரமறுத்து அமைச்சர் விஷக்கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

30.01.2006 அன்று பிற்பகல் தமிழர்புனர்வாழ்வுக் கழகத்தினர் கடத்தப்பட்டனர். அவர்கள் குடும்பத்தினர் மறுநாள் காலை சம்பவம் இடம்பெற்ற 24 மணித்தியாலங்களுக்குள் - மட்டக்களப்பு பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்துள்ளனர்.

கடந்த காலங்களில் காணாமற்போன தமிழர்களைத் தேடிப்போன குடும்பத்தினருக்கு நேர்ந்த கதியை கிருஷாந்தி படுகொலை உட்பட பல சம்பவங்கள் எடுத்துக்காட்டுகின்றன. வடக்கு - கிழக்கில் தற்போது நிலவும் அசாதாரண சூழ்நிலையில் சம்பந்தப்பட்ட குடும்பத்தினர் சம்பவம் இடம்பெற்ற தினமே இரவு பொலீஸ் நிலையத்திற்கு அச்சம் காரணமாக முறையிடச் செல்லவில்லை.

இதேவேளை, தமிழர் புனர்வாழ்வுக் கழகம் கடந்தமாதம் 31ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு மட்டக்களப்பு பொலீஸ் நிலையத்தில் முறைப்பாட்டை பதிவுசெய்துள்ளது. கடத்தப்பட்டவர்களின் குடும்பத்தினரும், தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் செய்த இந்த இரு முறைப்பாடுகளுமே முழுமையான விசாரணையை மேற்கொள்ளப் பொலீஸாருக்குப் போதுமானவை.

கடந்த 31ஆம் திகதி தமிழர் புனர்வாழ்வுக் கழக அலுவலகத்தில் வைத்து, அதன் நிர்வாக அலுவலரிடமிருந்து பொலீஸ் அத்தியட்சகர் மகேஸ்பெரேரா, சப் இன்ஸ்பெக்டர் முனசிங்க ஆகியோர் பொலீஸ் பதிவேட்டில் முறைப்பாட்டைப் பதிவுசெய்துள்ளனர். ஜனாதிபதியின் பணிப்பின்பேரில் விசாரணைக்காகத் தாம் வெலிகந்தவுக்குச் செல்கிறார்கள் என்றும், தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அனுப்பிய 'பக்ஸ்' செய்தியையடுத்தே ஜனாதிபதி இந்த நடவடிக்கையை எடுத்தார் என்றும் அப்போது அவர்கள் கூறியுள்ளனர்.

கடத்தப்பட்டவர்களின் குடும்பத்தினர் கடந்த 31ஆம் திகதி வெலிகந்த பொலீஸ் நிலையத்திற்கு முறையிடச் சென்றனர். அவர்களது முறைப்பாட்டை ஏற்க பொலீஸார் மறுத்துள்ளனர்.

கடத்தப்பட்டவர்களில் வவுனியாவைச் சேர்ந்த யுவதியின் குடும்பத்தினர் இம்மாதம் முதலாம் திகதி வவுனியா பொலீஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளனர். பொலீஸ் கான்ஸ்டபிள் விஜயசிங்க (அடையாள இலக்கம் 31736) என்பவர் இதனைப் பதிவுசெய்துள்ளார்.

விடுவிக்கப்பட்ட இரு பெண்கள் அதேதினத்தில் வெலிகந்த பொலீஸ் நிலையத்துக்குச் சென்று நடந்தவற்றை தனித்தனியே இரு முறைப்பாடுகளாகப் பதிவுசெய்துள்ளனர். இதன் பின்னர் சண்முகநாதன் சுஜேந்திரன் மற்றும் தம்பிராசா வசந்தராஜன் ஆகியோரின் தாய்மார்கள் வெலிகந்த பொலீஸ் நிலையத்தில் அன்று முறைப்பாடு செய்துள்ளனர்.

கடத்தப்பட்டவர்களின் குடும்பத்தினரும், நெருக்கமானவர்களும் அடைந்துள்ள அதிர்ச்சியும் கவலையும் எழுத்தில் வர்ணிக்க முடியாதவை.

இந்த நிலையில் வெளிவிவகார அமைச்சர் உண்மைநிலையை உணராது வாய்க்கு வந்தபடி பேசுவது பொறுப்பற்ற செயலாகும்.

இவ்வாறு ஈழவேந்தன் எம்.பி. தெரிவித்துள்ளார். (ஒ)

## இரண்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புகள் வந்த வண்ணம் உள்ளன. ஆனாலும் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் நாட்டில் இல்லை. அவர் இன்றுதான் நாடு திரும்புகிறார். அவர் வந்தவுடன் இதுபற்றி தீர்மானமொன்று எடுக்கப்படும்.

மலையக மக்கள் முன்னணியுடன் சில இடங்களில் இணைந்து போட்டியிடுவதற்கு யோசனை கொண்டுள்ளோம்.

சில சமயங்களில் ஆளுங்கட்சியோடும் நாம் தேர்தலில் போட்டியிடும் நிலை வரலாம். ஆனால், அதற்கு முன்னர் எமது பக்கமிருந்து ஆளுங்கட்சிக்குச் சென்றுள்ள குப்பையை முதலில் ஆளும் தரப்பு அகற்ற வேண்டும். அப்படி அகற்றினால் நாம் சேர்ந்து போட்டியிட முடியும்.

- இவ்வாறு கூறினார் அந்தப் பிரமுகர். (க)

## அரச பேச்சு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்பன பற்றி இங்கு விரிவாக ஆராயப்பட்டிருக்கிறது. அதேபோல் இவை தொடர்பில் இதில் கலந்துகொண்ட கட்சிப் பிரமுகர்கள் தத்தமது கருத்துகளையும் வெளியிட்டுள்ளனர் லண்டன் ஹவார்ட் பல்கலைக் கழக நிபுணர்கள் மற்றும் சட்ட வல்லுநர்கள் பலர் இதில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்டுள்ளனர். நேற்றுக்காலை 9 மணிக்கு ஆரம்பமான இந்தப் பட்டறை மாலை 5 மணிவரை நடந்தது. இரண்டாவது நாள் கருத்தரங்கு இன்றைய தினம் இடம்பெறும். மூன்றாம், நான்காம் நாள் பட்டறைகள் எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறுமெனத் தெரிவிக்கப்பட்டது. நேற்றைய நிகழ்வின் ஆரம்பத்தில் சுமார் இருமணி நேரம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் பங்குபற்றினார். (க)

## நோர்வே, சுவிஸ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் நடேசன், கட்டளைத் தளபதி கேணல் ஜெயம், மட்டக்களப்புப் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் இளந்திரையன் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில்,

ஜெனீவாப் பேச்சுகளில் பங்கு பற்றும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் குழு தொடர்பான முன்னேற்பாடுகளைக் கவனிப்பதற்காக நோர்வேயின் கொழும்புத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கரும், கொழும்புக்கான சுவிஸ் தூதுவர் பேமர்டினோ றெகஸோனியும் நாளை கிளிநொச்சி வரவுள்ளனர். விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை அவர்கள் இருவரும் சந்தித்துப் பேசுவர் என எதிர் பார்க்கப்படுகின்றது. புலிகளின் பிரதிநிதிகளின் போக்குவரத்து ஒழுங்குகள், ஜெனீவாவில் தங்குமிட ஏற்பாடுகள், பேச்சு நடைபெறும் இடங்கள் மற்றும் வசதிகள் குறித்து இரண்டு நாட்டுத் தூதர்களும் தமிழ்ச் செல்வனுடன் விரிவாகக் கலந்துரையாடுவார்கள். பேச்சுக்கான அனுசரணையாளர்கள் என்ற முறையில் நோர்வே தூதுவரும் பேச்சு நடைபெறும் நாட்டின் தரப்பினர் என்ற முறையில் சுவிஸ் தூதுவரும் இந்த ஏற்பாடுகளைக் கவனிக்கின்றனர்.


தமிழ்
திரு.குழந்தை
A/L 2008 ஆரம்பம்
6.2.2006 திங்கள்
5 p.m. (N.T)
A/L 2007
திங்., புத.,
வெள்ளி. 4 p.m.
பதிய அனுமதிகள்
வழங்கப்படும்.
புதிய
யூனிவேசல் அக்கடமி
A/L 2007
பொருளியல்
ஆரம்பமாகிவிட்டது.



இலவச
சிங்கள வகுப்பு
மேலதிக விவரம் 12ஆம் பக்கத்தில்


## பேச்சுக் குறித்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவை நிபந்தனைகளை விதிக்கவில்லை. பேச்சுக்கான நிகழ்சிநிரல் இன்னும் பூர்த்தியாக்கப்படவில்லை. விரைவில் அது பூர்த்தியாக்கப்படும். பேச்சு குழுவில் இராணுவத்தில் தளபதி தரத்தில் உள்ள மூத்த அதிகாரி ஒருவர் சேர்க்கப்படவிருக்கின்றார். அது குறித்து இன்னும் முடிவுசெய்யப்படவில்லை என்றார். (ஒ-3)

## வேட்பு மனுக்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளன எனவும் அவர் கூறினார்.

வவுனியா, முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்புமனுக்கள் வவுனியா மாவட்ட செயலகத்திலும் - யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்புமனுக்கள் யாழ். மாவட்டச் செயலகத்திலும் - ஏற்றுக் கொள்ளப்படவுள்ளன.

நாட்டின் 18 மாநகரசபைகள், 42 நகர சபைகள், 270 பிரதேசசபைகள் உட்பட 330 உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன.

வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் யாவும் எதிர்வரும் 16ஆம் திகதி நண்பகல் 12 மணியுடன் நிறைவடையவுள்ளன. சுயேச்சைக் குழுக்கள் தமது கட்டுப்பணத்தை 15ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை செலுத்த முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. சுயேச்சைக்குழு வேட்பாளராகப் போட்டியிடும் ஒவ்வொருவருக்கும் தலா 250 ரூபா வீதம் கட்டுப்பணம் செலுத்தப்படவேண்டும்.

16ஆம் திகதி பிற்பகல் 1.30 மணியளவில் வேட்பாளர்களுக்கான இலக்கங்கள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் என்பவற்றுக்கான சின்னங்கள் யாவும் வழங்கப்படவுள்ளன. எனவும் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (க)

## பேச்சில் கலந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடயங்கள் குறித்து சிறப்பு பயிற்சி வழங்கப்படும் எனவும் - சமஷ்டி, ஐக்கியம், ஒற்றுமை ஆகியவை குறித்தும் இப்பயிற்சிகளின்போது கூடிய விளக்கங்கள் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (க)

## ஐ.தே.க. வாகை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிட்டார்.

விஜித ஹேரத் மேலும் கூறியதாவது:-

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தனித்துப் போட்டியிட ஜே.வி.பி. தீர்மானித்து விட்டது. இதற்கு கட்சியின் மத்திய குழுவின் அங்கீகாரம் கிடைத்துவிட்டது. தேர்தலில் எமது தனித்துவத்தை முன்னிறுத்தி இப்போதிருப்பதைவிட கூடுதலான உள்ளூராட்சி மன்றங்களை நாம் கைப்பற்றுவோம்.

சில நிபந்தனைகளை முன்வைத்து கடந்த மாதம் 27ஆம் திகதியும், இம்மாதம் மூன்றாம் திகதியும் நாம் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பிரமுகர்களுடன் பேச்சுகளை நடத்தினோம்.

தேர்தல் வேட்பாளர் நியமனத்தில் பெரும் பான்மை வீதம் எமக்குக் கூடுதலாக வழங் கப்பட வேண்டும், வெற்றிபெறும் உள்ளூராட்சி மன்றங்களில் மூன்றிலொரு பகுதி வழங் கப்பட வேண்டும், ஊழல், மோசடிகளை உள்ளூராட்சி மன்றங்களில் இல்லாதொழிக்கும் விசேட திட்டம் உருவாக்கப்பட வேண்டும் - என்பன போன்ற நிபந்தனைகளை நாம் சுதந்திரக் கட்சியிடம் முன் வைத்தோம்.

இதற்குப் பதிலளிக்கப்படுமென எமக்கு உறுதிமொழி வழங்கப்பட்டது. ஆனால், இதுவரை எவ்விதமான பதிலும் வழங்கப்படவில்லை. எனவே நாம் தனித்துப் போட்டியிடத் தீர்மானித்துவிட்டோம்.

எமது கூட்டணி தனித்துப் போட்டியிடுவது நிச்சயமாக தேர்தலில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும். ஐக்கிய தேசியக் கட்சி கூடுதலான ஆசனங்களைக் கைப்பற்றக்கூடும். இதற்கு நாம் பொறுப்பாளிகள் அல்லர். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியே இதற்கான முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும்.

-இவ்வாறு கூறினார் விஜித ஹேரத் எம்.பி. (க)


COLLEGE OF ENGLISH
பிறவுன் வீதி, நீராவியடி, யாழ்.
SPOKEN ENGLISH With GRAMMAR
Mr. T.THANENDRAN
புதிய பிரிவுகள் நடைபெறும் நாட்கள்
சனி,ஞாயிறு,வியா,வெள்.
3.30,4.30,5.30
ஆரம்பம்: 09.02.2006



விக்னா
கல்வி நிறுவனம்
A/L பிரிவு 1 DAY CLASS
ஆரம்பமாகிவிட்டது.
வாரத்தில்
5 நாள்கள்
(8.30 - 2.30)
அனுமதிகள்
வழங்கப்படுகின்றன.



புதிய பிரிவுகள் ஆரம்பம்
1. ஆங்கிலம் : பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக, உயர்கல்வி மாணவர்கள், அலுவலர்கள், பெற்றோர், இளைஞர்கள் மற்றும் வீட்டுப்பெண்களுக்கானது. காலம் : 3 மாதங்கள்
2. சிங்களம் அன்றாட வசனங்களைக்கொண்டு முழுமையாக கதைப்பதற்கான பாடநெறி. காலம் : 2 மாதங்கள்
கட்டணம் ரூபா 3000/-
சிறப்புச்சலுகை முடிவு
இன்று பதிவுசெய்வோருக்கு 4000/- இற்கான ஆங்கில, சிங்கள, புத்தகங்கள், CD இலவசம்
SAAMSTECH
233/4, Kasthuriar Road, Jaffna



EXPOAIR
your friend in the skies...
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...

தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவ[illegible] 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.02.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org